البرهان القاطع في مدح النور الساطع

தாஹா நபியின் புகழுக்கு ﷺ தகுந்த ஆதாரம்!

ஆசிரியர்:

ஷைய்குன் நஜாஹ்,

அல்–ஹாஜ் மௌலவி ஏ.எல். முஹாஜிரீன்,


அபூ ஸாலிஹ் தக்கியா

முஹ்யத்தீன் மஸ்ஜித் ரோட்,

கொழும்பு – 10.

பொருளடக்கம்

உள்ளே...



நூலின் பெயர் : தாஹா நபீயின் புகழுக்கு தகுந்த ஆதாரம்

நூலாசிரியர் : ஷெய்குன் நஜாஹ், அல்ஹாஜ் மௌலவீ ஏ.எல். முஹாஜிரீன்,
169 A, ரைத்தலாவெல,
உக்குவெலை.

பக்கம் : 66

வெளியீடு : "ஹிஸ்புல்லாஹ் சபை"

விலை : 70/=

முதற்பதிப்பு : 2002.09.14.

அச்சிட்டோர் : "வெற்றி" வெளியீட்டாளர்கள்.



மதிப்புரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருட்பெயரால் ஆரம்பிக்கின்றேன்.

அதிலத்தாருக்கு அரும்பெரும் அருட்கொடையாய் அனுப்பப்பட்ட எம்பெருமானார் முஹம்மது ﷺ அவர்கள் மீதும், அவர்கள் தம் கிளையார், தோழர், அனைவர் மீதும் இறை அருளும் அன்பும் சாந்தியும் உரித்தாகுக!

ஷெய்குன் நஜாஹ் பெரும் மதிப்புக்கும் கன்னியத்திற்கும் உரிய மௌலானா மௌலவி அல்ஹாஜ் A.L. முஹாஜிரீன் *(காதிரி சூபி, வர்ரியாஇய்யி, நத்வி)* அவர்கள் எழுதியுள்ள **"தாஹா நபியின் புகழுக்கு தகுந்த ஆதாரம்"** என்ற நூலை வாசிக்கக் கேட்டோம்.

ஆசிரியர் அவர்கள் மிகத் தேவையான சமயத்தில் மிக மகத்தான ஒரு சேவையை புரிந்துள்ளார்கள். இந்நூல் சிறந்த, உறுதிவாய்ந்த ஆதாரங்களுடன் எழுதப்பட்டுள்ளது. பொதுமக்கள் குழப்பங்களைவிட்டு நீங்கி தெளிவு பெறுவதற்கு இந் நூல் சிறந்த ஆதாரமாகும் என்பதை உறுதிப்படுத்துகின்றோம். ஆதாரங்களைத் தேடி எடுக்க முடியாத நிலையிலிருக்கும் பல்வேறு மக்களுக்கும், இளம் உலமாக்களுக்கும் பயன் தரக்கூடியதாக இது அமைந்துள்ளது.

தொகுப்பாசிரியரின் ஆயுளை அல்லாஹ் நீடிக்கச் செய்து, தீன் சேவைகள் பல ஆற்றிட அருள்புரிவானாக! அவர்களின் மகத்தான முயற்சியினை ஏற்று அவர்களுக்கு ஈருலகிலும் நற்பாக்கியங்களை அருள்வானாக! ஆமீன்.

இப்படிக்கு,

1. அல்-ஹாஜ் மௌலவி அல்-ஹாபிழ் A.W.M. ஆதில் (நழாரி)
2. அல்-ஹாஜ் மௌலவி அல்-ஹாபிழ் M.S. காஜா முயீனுதீன் (மஹ்ழரி)
3. மௌலவி M.M.M. மபாஸ் (நழாரி)
4. மௌலவி M.M. அஹ்மத்து ஷாஹ் (ஜமாலி, பையாஜி)

K. A. Q. ARABIC COLLEGE,
108/38, Maligakantha Road,
Maradana, Colombo-10.

சிறப்புரை

வாஞ்சைக்குரிய வாசக நெஞ்சங்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்

சங்கைக்குரிய மௌலானா மௌலவி அல்-ஹாஜ் முஹாஜிரீன் ஹழ்ரத் காதிரி அவர்கள் எழுதிய **"தாஹா நபியின் புகழுக்கு தகுந்த ஆதாரம்"** என்ற நூலை ஆரம்பமுதல் இறுதிவரை பார்வையிட்டேன். இன்றைய காலக்கட்டத்தில் சுன்னத் ஜமாஅத்துடைய தூய கொள்கைகளை சம்பந்தமில்லாமல் சாடிக் கொண்டிருக்கும் சிறுமதியாளர்களுக்கு சாட்டை அடி கொடுத்தாற் போல் இந் நூலின் ஆதாரங்கள் அமைந்துள்ளன. பெருமானார் ﷺ அவர்கள் மீது புகழ்பாடுவதையும் ஷிர்க் என்று சித்தரித்துக்காட்டி சத்தியக் கொள்கைகளை சிதைத்துவிட எண்ணும் சதிகாரர்களுக்கு கருஞ்சாவு மணி அடித்தாற்போல இதன் கருத்துக்கள் சிறு சிறு தலைப்பின் கீழ் அழகுற இடம்பெற்றிருக்கின்றன.

பெருமானாரின் பிரத்தியேக தகைமைகளில் பத்து அம்சங்களைக் குறிப்பிட்டிருப்பது இந்நூலுக்கு மேலும் மெருகூட்டுகின்றது. இந்நூலை நல்லோர் அனைவருக்கும் நற்பயனுள்ளதாக ஆக்கியருள்வதுடன் இதுபோன்ற இன்னும் பல நன் நூல்கள் எழுத நூலாசிரியருக்கு நல்லுதவி புரிய வேண்டும் என எல்லாம் வல்ல ரஹ்மானிடம் பிரார்த்தித்தவனாக விடைபெறுகின்றேன்.

வஸ்ஸலாம்:

இப்படிக்கு,

மௌலவி அ. முஹம்மது ஜவாஹிர ஹுஸைன்-
ஆலிம் - ஜல்வத்தி,
காதிமுல் கௌதிய்யா,
தெஹிவளை,
இலங்கை.

பொருளடக்கம்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

முன்னுரை

الصلاة والسلام عليك ياحبيبي يا رسول الله

சர்வ புகளும் ஏக வல்லவனான அல்லாஹ்வுக்கே. அவன் அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்து ஆட்சி புரிபவன்.

மேலும், ஈருலக இரட்சகராகவும் நபிமார்களுக்குத் தலைவராகவும் பாவம் செய்தோருக்கு பராபரனிடத்தில் பரிந்து பேசக்கூடியவர்களாகவும், அகிலத்திற்கு அருட்கொடையாகவும், சற்குண சீலராகவும் உதித்த எங்களுடைய நாயகம் முஹம்மத் ﷺ அவர்கள் பேரிலும், அன்னாரின் கிளையார், தோழர்கள் தொடர்ந்தவர்கள், தொடர்பவர்கள், நாதாக்கள், அவ்லியாக்கள், நல்லவர்கள், கண்ணியத்துக்குரிய ஷெய்குமார்கள் அனைவர் மீதும் ஸலவாத் எனும் கருணை மாரியும் ஸலாமெனும் வந்தனமும் உண்டாவதாக! ஆமீன்.

எல்லாம் வல்ல இறைவன் தனது தாதராகிய ஹபீபு முஹம்மத் ﷺ அவர்களின் புகழை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றான். முஃமீன்களுக்கும் வெளிப்படுத்துமாறு கட்டளை பிறப்பித்துள்ளான்.

இதன் அடிப்படையில்:

ورفعنا لك ذكرك

“உங்களை ஞாபகம் செய்வதை உயர்த்திவைத் தோம்” என்று அருள்மறையிலும்

اذاذكرت ذكرت معى

“**நான் ஞாபகம் செய்யப்பட்டால் நீங்களும் என்னுடன் சேர்ந்து ஞாபகம் செய்யப்படுவீர்கள்**” என்று ஹதீஸ் குத்ஸியிலும் கூறியுள்ளான். இதனால் தான் அனைத்து அமல்களுக்கும் மேலான அமலான தொழுகையிலும் கூட நாயகம் ﷺ அவர்கள் ஞாபகம் செய்யப்படுகிறார்கள். அப்படியானால் அன்னாரின் புகழ் தொழுகையிலும் பாடப்படுகின்றது. எனவே, அல்லாஹ் எனது ஹபீபின் புகழ் தொழுகையில் மட்டும் பாடப்படுவது போதாது. எப்பொழுதும் எங்கும் பாடப்படுவது அவசியம் என்பதை வலியுறுத்தி

ان الله وملائكته يصلون على النبي يا ايهاالذين امنوا صلوا عليه وسلموا تسليما

“நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது அமரர்களும் நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லிக் கொண்டே இருக்கின்றார்கள். மு:மின்களே! அவர் கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள்” எனக் கூறியுள்ளான்.

நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது அமரர்களும் அண்ணல் நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத் சொல்லிக் கொண்டே இருக்கின்றார்கள் என்றால், அவர்களின் கீர்த்திகளையும் சிறப்புக்களையும் வெளிப்படுத்தி வைப்பது கொண்டு ஊக்கம் கொள்கிறார்கள் என அல்லாமா காழியுல் பைழாவி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள். இக்கருத்தின் அடிப்படையில் மு:மின்களே நீங்களும் அவர்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள் என்றால், மு:மின்களே நீங்களும் நபியின் கீர்த்திகளையும் சிறப்புக்களையும் வெளிப்படுத்தி வைக்க பிரயத்தனம் எடுத்துக் கொள்ளுங்கள் என்பதுதான் பொருளாகும்.

இதனால்தான், ஸஹாபாக்கள், தாபியீன்கள், தபஉத்தாபியீன்கள், இமாம் கள், ஒலிமார்கள் தாஹா நபி மீது பல புகழ் மாலைகள் பாடியுள்ளதையும் அவைகள் இன்று அண்ணலாரின் மீது அன்பு வைத்த நண்பர்கள் பாடுவதை யும் காணுகின்றோம். இப்புகழ் மாலைகள் அத்தனையும் ஸலவாத்தின் பொருளடக்கமே தவிர வேறில்லை.

வள்ளல் நபியை வாயாரப் புகழ்வதன் மூலம் அவர்களின் மேலான வாழ்க் கை முறை, நற்குணங்கள், அவர்கள் காட்டிய அற்புதங்கள் வெளிப்படுத் தப்படுகின்றன. இதனால் அவர்கள் மீது அன்பு ஏற்படுகிறது. அவர்களின் அன்பு ஈமானுக்கு அத்தியவசியமானதொன்றாகும். ஏனெனில்,

الا لا ايمان لمن لا محبة له

“யாருக்கு அன்பு இல்லையோ அவருக்கு ஈமான் இல்லை” என்று நாயகம் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

கருமம் இவ்வாறிருக்க தற்காலத்தில் தோன்றியிருக்கும் அரைவேக்காடுகள் தாஹா நபியின் தரத்தைக்குறைக்கும் பொருட்டு அவர்கள் எங்களைப்

பொருளடக்கம்

போன்று சாதாரண மனிதரென்று அவர்களின் புகழைப்பாடுவது ஷிர்க், குப்ர், பித்அத் என்றும் வாய் கூசாது உளரித்திரிவதை அன்றாடம் பார்க்கின்றோம். இவர்களின் மாயவலையில் அறிவில்லாத மக்கள் பலா் அகப்பட்டு ஆண்டாண்டு காலமாகச் செய்யப்பட்டு வந்த அமலான மௌலிது மஜ்லிஸ்களை அவலட்சனமாக மதிக்கவும் ஆரம்பித்துவிட்டனர். ஆகவே, அவர்கள் தங்களின் தவறை உணர்ந்து செயல்படவும் மௌலிது மஜ்லிஸ்களை நடத்தியோர் அதை விடாது நடத்திவரவும் துணை புரியும் பொருட்டு இச் சிறு நூலை எழுத ஆரம்பித்தேன்.

இந்நூலில் அடங்கியிருக்கும் விடயங்கள் குர்ஆனிலிருந்தும், ஹதீஸிலிருந்தும், ஸஹாபாப் பெருமக்களின் வரலாறுகளிலிருந்தும், இமாம்களின் கிதாபுகளிலிருந்தும் எடுக்கப்பட்டவைகளாகும். எனது சொந்தக்கருத்துக்களை முற்றிலும் குறைத்துள்ளேன். அத்துடன் இந்நூலுக்கு...
(البرهان القاطع في مدح النور الساطع) தாஹா நபியின் புகழுக்கு தகுந்த ஆதாரம் எனப் பெயரிட்டுள்ளேன்.

எனவே, இந்நூலைப் பார்வையிடும் அறிஞர் பெருமக்கள் இதில் பிழைகள் இருந்தால் திருத்திக் கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.
எல்லாம் வல்ல அல்லாஹ் இந்நூலின் மூலம் தாஹா நபியின் புகழ் மென்மேலும் வளரவும் வழிகேடுகள் ஒழியவும் செய்வானாக! இந்நூலைப் பார்ப்பவர்களுக்கும் - இதன்மூலம் பிரயோசனம் பெறுவோர்களுக்கும் இதனை அச்சிட உதவி செய்தோர்களுக்கும், எழுத்துப்பிழைகளைத்திருத்தியோருக்கும் மற்றும் ஆலோசனை வழங்கியோருக்கும் நபிகள் நாயகம் ﷺ அவர்களின் ஷபாஅத்தைப் பெற்று அவர்களோடு சுவர்க்கத்தில் குடியிருக்கும் பாக்கியத்தைத் தருவானாக!

இவ்வண்ணம்,
"இஸ்லாமிய ஊழியன்"
மௌலவி ஷெய்குன்நஜாஹ்அல்-ஹாஜ்
A.L. முஹாஜிரீன்,
அல்-காதிரி, சூபி வர்ரிபாஇய்யி நத்வி.

பொருளடக்கம்

الحمد لله الذي شرف الانام بصاحب المقام الاعلى وكمل السعود
باكرم مولود حوى شرفا وفضلا- وشرف به الاباء والجدود
وملأالوجود بوجوده عدلا- والصلاة والسلام على سيدنا
وسندنا ومرشدنا ومنجينا محمد صلى الله عليه وسلم وعلى اله وأصحابه
الفضلا أما بعد!

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் உயர்த்தியான ஸ்தானத்தை உடையவர்களாகிய நாயகம் ﷺ அவர்களைக் கொண்டு மனிதர்களை சிறப்பாக்கி வைத்தான். வரிசைகளையும் சிறப்புக்களையும் பொழிந்து மா நபியைக் கொண்டு சீதேவித்தனத்தைப் பூரணமாக்கி வைத்தவன் மேலும், அவர்களின் மூலமே அவர்களின் பெற்றோர்களையும் பாட்டன்மார்களையும் சிறப்பாக்கி வைத்தவன். அவர்களின் உஜூதைக் கொண்டு இவ்வுலகத்தை நீதத்தால் நிரப்பியவன். மேலும், ஸலவாத் எனும் கருணை மாரியும், ஸலாமெனும் வந்தனமும் சாந்தி நபி ﷺ அவர்கள் மீதும் அண்ணவரின் கிளையினர் தோழர்கள் மீதும் உண்டாவதாக!

மாநபியின் புகழ் மண்ணுலகத்திற்கு புதிதாக வந்ததொன்றல்ல. மன்னருக் கெல்லாம் மன்னனான அல்லாஹ் மாநபியின் புகழை அன்றே வெளிப்படுத் திவிட்டான். இதைத்தான் **அல்லாமா ஸதகதுல்லாஹில் காஹிரி ரஹ்மதுல் லாஹி அலைஹி அவர்கள்:**

وما مدحه فى العالمين بعارض   فقد مابه القرآن جاد كعارض
فإن لا مني غمر ولو بمعارض   تُلغت بمدحى رأس كل معارض
وواش وساء وهو بالمعى مثلث

முஹம்மத் ﷺ அவர்களின் புகழ் அகிலத்தாருக்குள் இன்று நேற்று வந்த தல்ல. பூர்வீகத்திலே அந்தப்புகழைக் கொண்டு மழைமேகம் மழையை வரிசிப்பது போன்று வரிசித்துக் கொண்டே இருக்கின்றது. ஆகையால் எந்த மடையனாவது சாடை ஷைக்கினைக்காவது நாயகத்தைப் புகழ்வதில் என்னைப்பழித்தால், எனக்கு இடையூறு செய்கின்ற அவர்களை கோள்சொல்

கின்றவர்களை, அவர்களுடைய தலைகளை நான் நாயகத்தின் மீது செய்யும் புகழைக் கொண்டு உடைத்து நொருக்கிவிடுவேன் எனப்பாடு கின்றார்கள்.

1: அண்ணலாரின் புகழுக்கு அல்–குர்ஆனின் ஆயத்துக்களில் சில...

وإنك لعلى خلق عظيم

"நாயகமே! நீங்கள் நிச்சயமாக வழுப்பம் வாய்ந்த நற்குணத்தில் இருக் கிறீர்கள்." **(சூரத்துல் கலம்: 4)**

إنا أرسلناك شاهدا ومبشرا ونذيرا وداعيا إلى الله بإذنه وسراجا منيرا

"நாயகமே! நிச்சயமாக நாம் உங்களை சாட்சியம் சொல்லக்கூடியவர்களாகவும், ஈமான் கொண்டோருக்கு சுபசெய்தி கூறக்கூடியவர்களாகவும், ஈமான் கொள் ளாதோருக்கு எச்சரிக்கை செய்யக்கூடியவர்களாகவும், அல்லாஹ்வின் அனுமதியு டன் அவனுடைய மார்க்கத்தின் பக்கம் மக்களை அழைக்கக்கூடி யவர்களாகவும், இளங்கும் விளக்காகவும் அனுப்பியுள்ளோம்." **(சூரத்துல் அஹ்ஸாப்: 46)**

إنا ارسلناك شاهدا ومبشرا ونذيرا لتؤمنوا بالله ورسوله
وتعزروه وتوقروه وتسبحوه بكرة وأصيلا

"காரணம் விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் விசுவாசித்து (தூதராகிய) அவர்களுக்கு சன்மார்க்கத்தில் உதவி செய்து, அவர் களை கண்ணியப்படுத்தி, அல்லாஹ்வை காலையிலும் மாலையிலும் துதி செய்வ தற்காகவே நாயகமே நாம் உம்மை அனுப்பி வைத்தோம்."
(சூரத்துல் பத்ஹ் : 9)

விளக்கம்:
நிச்சயமாக யார் அல்லாஹ்வை மட்டும் கண்ணியப்படுத்தி ரசூலை கண்ணி யப்படுத்தவில்லையோ அல்லது ரசூலை மட்டும் கண்ணியப்படுத்தி அல் லாஹ்வைக் கண்ணியப்படுத்தவில்லையோ அவர் விசுவாசியாக முடியாது.

எனினும் இருவருக்கிடையிலும் கண்ணியப்படுத்துதலை மிகவும் விரும்புகின் றவர்கள்தான் உண்மையான முஃமின் ஆவார்.

அல்லாஹ்வை கண்ணியப்படுத்துதல் என்பது படைப்பினங்களுக்கு உண் டான வர்ணிப்புக்களைவிட்டு அவனைப்பரிசுத்தப்படுத்துவதும், அங்க சம்பூர ணமான வர்ணிப்புக்களைக் கொண்டு அவனை வர்ணிப்பதுமாகும்.

"நபியை கண்ணியப்படுத்துவதென்பது அவர்களை அல்லாஹ் எல்லாப்படைப் புக்களுக்கும் பொதுவான தூதராக அனுப்பியுள்ளான் என்றும், அவர்கள் நற் குண சீலர், சற்குணமுடையவர்கள், மனிதப்புனிதர், மேலானவர்கள், சங்கைக் குரியவர்கள் என்றெல்லாம் நம்பிக்கை கொள்வதாகும்".

ஆதாரம்: *தப்ஸீர் சாவி – பக்: 92, பாகம்: 4*

قل بفضل الله وبرحمته فبذلك فليفرحوا هو خير مما يجمعون {سورة يونس ٥٨}

மேற்கண்ட வசனத்தில் فضل الله என்பது العلم (அறிவு) என்பதாகும். رحمة என்பது முஹம்மது ﷺ அவர்கள் என்று இப்னு அப்பாஸ் ؓ அவர்கள் விளக்கம் கூறியுள்ளார்கள் என்பதாக அபுஷ்ஷெய்க் அறிவித் துள்ளார்கள், ஏனென்றால் அல்லாஹ் குர்ஆனில் நாம் உங்களை அகிலத் தாருக்கு ரஹ்மத்தாகவே அனுப்பியுள்ளோம் எனக் கூறியுள்ளான்.

ஆதாரம்: அத்துர்ருல் மன்தூர், பக்: 267, பாகம்: 4

அல்லாஹ்வின் வரிசை என்ற இல்மைக் கொண்டும் அவனின் ரஹ்மத்தென்ற நாயகம் ﷺ அவர்களைக் கொண்டும் அவர்கள் சந்தோஷமடையட்டும். மேலும், அதைக் கொண்டே சந்தோஷமடையட்டும். அது அவர்கள் எதைச் சேமிப்பார்களோ அந்த ஒன்றை விடவும் சிறந்தது என்பதுதான் விளக்கமாகும்.

நபி புகழுக்கு அன்னாரின் வழிகாட்டலும் வாக்கியங்களும்:

عن عائشة رضي الله عنها قالت ما غرت على أحد من نساء النبي صلى الله عليه وسلم ما غرت على خديجة ومارأيتها ولكن كان النبي صلى الله عليه وسلم

يكثر ذكرها وربما ذبح الشاة ثم يقطعها أعضاء ثم يبعثها في صدائق خد يجة فربما قلت له كأنه لم يكن في الدنيا امرأة إلا خد يجة.فيقول إنها كانت وكانت وكان لى منها ولد

"நான் கதீஜா நாயகியவர்கள் மீது பொறாமை கொண்டது போல் நாயகத்தின் எந்த மனைவியின் மீதும் பொறாமை கொள்ளவில்லை. நான் அவர்களைக் கண் டதுமில்லை. எனினும் நாயகம் ﷺ அவர்கள் கதீஜா நாயகியவர்களின் நல்லம் சங்களை அதிகம் ஞாபகம் செய்வார்கள் சில நேரங்களில் ஆடுகள் அறுத்து பங்குகளாகப்பிரித்து கதீஜா நாயகியின் தோழிகளுக்கு அனுப்பவும் செய்வார்கள். நான் கதீஜா நாயகியைத்தவிர வேறு பெண்கள் இவ்வுலகில் இல்லை போல் இருக்கின்றதே எனக் கூறுவேன். அதற்கு கதீஜா நாயகி அவர்கள் இப்படி இப்ப டித்தான் என்னோடு இருந்தார்கள். அவர்கள் மூலம்தான் எனக்குப் பிள்ளை களும் இருக்கின்றனர் என்று நாயகம் ﷺ அவர்கள் கூறுவார்களென ஆயிஷா நாயகி ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகின்றார்கள்."

***ஆதாரம்:** புஹாரி ஷரீப் – பக்கம்: 529, முஸ்லிம் ஷரீப்: 284::2*

நாயகம் ﷺ அவர்கள் ஆமிருனில் அன்ஸாரி ﷛ அவர்களின் இல்லம் சென்ற போது அங்கு அவர்கள் இன்றுதான் இன்றுதான் எனச் சொன்னவர்க ளாக நாயகம் பிறந்த தினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை தனது பிள்ளை களுக்கும், குடும்பத்தினருக்கும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது கண்ட நபியவர்கள் சந்தோஷமடைந்து அல்லாஹ் உங்களுக்கு ரஹ்மத்துடைய வாயில்களைத் திறந்து விட்டான். மலக்குகள் உங்களுக்காக அல்லாஹ்வி டம் பிழை பொறுக்கத்தேடுகிறார்கள். நீங்கள் செய்வது போல் எவர்கள் செய்கின்றார்களோ நீங்கள் ஜெயம் பெறுவது போன்று அவர்களும் ஜெயம் பெறுவார்கள் எனக் கூறினார்கள், என நாயகமவர்களுடன் சென்ற அபூ தர்தா: ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள். **(அஸ்ஸில்குல் முஅல்லம்)**

நாயகம் ﷺ அவர்கள் இப்னு அப்பாஸ் ﷛அவர்களது வீட்டுக்குச் சென்ற போது அவர்கள் தமது வீட்டில் ஒரு கூட்டத்தினருக்கு நாயகம் பிறந்த தினத்தன்று நடந்த முஃஜிஸாத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைக்கேட்டுக் கொண்டிருப்போர் அல்லாஹ்வைப் புகழுகின்றார்கள். இது கண்ட நாயகமவர்கள் எனது மன்றாட்டம் உங்களுக்கு கட்டாயமாகிவிட்டது

எனக் கூறினார்கள். (அஸ்ஸில்சுலுல் முஅல்லம்)

இதைக்குறித்துத்தான் அபூபக்கரினில் ப:தாதிகுத்திஸ் ஸிர்ருஹு அவர்கள்:

تكاثرت المداح فى مدح أحمد عسى هو ينجيهم إذا النعل زلت

"அஹ்மது ﷺ அவர்களைப் புகழ்ந்த புலவர்களெல்லாம் நாயகத்தை அதிகமாகப்புகழ்ந்தது இவர்கள் சிராதுல் முஸ்தகீம் பாலத்தில் கால் சறுக்கும் நேரத்தில் காருண்ய நபி சிபாரிசு செய்து தங்களைப்பாதுகாக்கப் போதும் என்பதினால் தான்" எனக் கூறினார்கள்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளின் மூலம் நபி புகழ் பாடல் நாயகத்தின் அங்கிகாரத்தைப் பெற்றிருப்பதுடன் அதை நடத்துவோர் அவர்களின் பிரார்த்தனைக்கும் உள்ளாகின்றனர் என்பது தெளிவாகிறது.

இன்னும் மாநபியவர்கள், நபிமார்களை ஞாபகம் செய்வது வணக்கம் "ஸாலிஹீன்களை ஞாபகம் செய்வது சிறு பாவங்களுக்குக் குற்றப்பரிகாரம்" என ﷺ அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம்: *ஜாமிஉஸ்ஸகீர்.*

"உங்களில் மரணித்தவர்களின் நற்குணங்களை ஞாபகம் செய்யுங்கள்"

ஆதாரம்: *அபூதாவூத்*

தாஹா நபி தான் பிறந்த தினத்தைக் கொண்டாடியதும் மூஸா அலைஹிஸ்ஸலாம் முடுமை நீங்கியதற்காக நன்றி செலுத்தியதும்:

سئل رسول الله صلى الله عليه وسلم عن صوم الإثنين فقال فيه ولدت وفيه أنزل على - مشكاة شريف ١٧٩\١

"நாயகம் ﷺ அவர்கள் திங்கட்கிழமை நோன்பு பிடிப்பதைப் பற்றி கேட்கப்பட்ட பொழுது அத்தினத்தில்தான் நான் பிறந்தேன். அத்தினத்தில்தான் எனக்கு வஹியும் இறக்கப்பட்டது" எனக் கூறினார்கள்.

عن ابن عباس رضي الله عنهما قدم النبي صلى الله عليه وسلم المدينة فرأى اليهود يصومون يوم عاشوراء فقال ما هذا قالوا هذا يوم صالح نجى الله بني إسرائيل من عدوهم فصامه موسى قال فأنا أحق بموسى منكم فصامه وأمر بصيامه

بخاري شريف ١\٣٤١

"நாயகம் ﷺ அவர்கள் மதினா சென்ற பொழுது யஹூதிகள் முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாள் நோன்பு பிடிப்பது பற்றி அறிந்து அது பற்றி அவர்களிடம் கேட்க, அவர்கள் இந்நாளாகிறது அல்லாஹ் பனீ இஸ்ராயீல்களை அவர்களின் விரோதிகளை விட்டும் காப்பாற்றிய நல்ல நாளாகும். எனவே, நபீ மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இந்நாளையில் நோன்பு நோற்றுள்ளார்கள். நாங்களும் அதைத் தொடர்ந்து நோற்கின்றோம் என்றார்கள். இது கேட்ட நபியவர்கள் நான் உங்களைவிட மூஸாவைக் கொண்டு மிகப்பாத்திரமானவன் எனக் கூறிவிட்டு தானும் நோன்பு நோற்று மற்றவர்களையும் நோன்பு பிடிக்குமாறு ஏவினார்கள்".

இதன் மூலம் நாயகம் தான் பிறந்த நாளில் நல்லமல்கள் செய்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியுள்ளார்கள் என்பதும் பிறரை அல்லாஹ் அபாயத்திலிருந்து காப்பாற்றியதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியுள்ளார்கள் என்பது தெளிவாகுவதுடன் அல்லாஹ்வின் அருட்கொடைகள் இறங்கிய நாட்களைக்குறித்து அல்லது தண்டனைகளிலிருந்து பாதுகாத்த நாட்களைக் குறித்து நாயனுக்கு நன்றி செலுத்தலாம் என்பதும் தெளிவாகிறது.

அத்துடன் நோன்பு வணக்க வழிபாடுகளில் ஒரு வகையாகும். எனவே, நோன்பு பிடித்தோ, குர்ஆன் ஓதியோ, தாணதர்மங்கள் செய்தோ, ஸலவாத்து ஓதியோ நாயனுக்கு நன்றி செலுத்தலாம்.

நாயகத்தை தோழர்கள் புகழ்ந்து பாடிய பாடல்கள் சில...

நபியவர்களின் சிறிய தகப்பனாராகிய அபூதாலிப் அவர்கள் நாயகத்தைப் புகழ்ந்து பல கவிதைகள் பாடியுள்ளார்கள். கீழ்வரும் இரு அடிகளும் அதில் நின்றுமுள்ளதுதான். அதாவது,

وشق له من اسمه ليجله   فذوا العرش محمود وهذا محمد

"அல்லாஹ் நபியவர்களைக் கண்ணியப்படுத்த தனது மஹ்மூத் என்ற பெயரில் நின்றும் முஹம்மத் என்ற பெயரை பிரித்தெடுத்து வைத்தான். ஆகவே, அர்ஷுக்குச் சொந்தக்காரனான அல்லாஹ் மஹ்மூதாக இருக்கிறான். நாயகம் ﷺ அவர்கள் முஹம்மதாக இருக்கின்றார்கள்."

மற்றும் ஹஸ்ஸான் இப்னு ﵁ தாபித் அவர்கள்:

ألم ترأن الله أرسل عبده   باياته والله أعلى وأمجد
أغر عليه للنبوة خاتم   من الله مشهود يلوح ويشهد
وضم الأله إسم النبي إلى اسمه   إذا قال في الخمس المؤذن يشهد
وشق له من إسمه ليجلّه   فذ والعرش محمود وهذا محمد
نبي أتانا بعد يأس وفترة   من الدّين والأوثان في الأرض تعبد
وأرسله ضوأ منيرا وهاديا   يلوح كما لاح الصقيل المصند

"நிச்சயமாக அல்லாஹ் தனது அத்தாட்சிகளைக் கொடுத்து தனது அடியாராகிய முஹம்மத் ﷺ அவர்களைத் தூதராக அனுப்பியுள்ளான். மேலும், ஜொலிக்கக் கூடிய, பார்க்கக்கூடிய நுபுவத்தின் முத்திரையை அவர்கள் மீது இலங்கச் செய்தான். மேலும், ஐங்காலத் தொழுகையில் சொல்லப்படும் அதானில் தன்னுடைய பெயருடன் அவர்களின் பெயரையும் முஅத்தின் சேர்த்துச் சொல்ல வேண்டுமென்று ஆக்கிவைத்தான். அவர்களை கண்ணியப்படுத்தி வைப்பதற்காக வேண்டி தனது மஹ்மூத் என்ற பெயரிலிருந்தும் பிரித்தெடுத்து முஹம்மத் எனப் பெயர் வைத்தான். எனவே, அர்ஷின் உரிமையாளனான அல்லாஹ் மஹ்மூதாகவும், நாயகம் முஹம்மதாகவும் இருக்கின்றார்கள்". எங்களுடைய நபியவர்கள் உலகில் விக்கிரகங்கள் வணங்கப்பட்டு, மார்க்கம் இன்னதென்று தெரியாது மக்கள் மனம் போன போக்கில் வாழ்ந்துகொண்டிருக்கும் வேளையில் நபியாக வந்தார்கள். நாயகமவர்களை இந்து தேசத்தின் தீட்டப்பட்ட வாள் ஜொலிப்பது போன்று ஜொலித்துக் கொண்டிருக்கும் நேர்வழி காட்டக்கூடியவர்களாகவும்,

ஒளியாகவும் அனுப்பி வைத்தான் எனப்பாடியுள்ளார்.

ஆதாரம்:. *தாரீகுல் ஹமீஸ், பக்கம்: 254, பாகம்: I*

மேலும் ஒரு முறை ஹஸ்ஸான் இப்னு தாபித் ﵁ அவர்கள்:

وأحسن منك لم ترقط عيني　　وأجمل منك لم تلد النساء
خلقت مبرأ من كل عيب　　كأنك قد خلقت كما تشاء

"நாயகமே! உங்களை விட அழகான ஒருவரை எனது கண்கள் அறவே கண்டதில்லை. உங்களைப் போன்ற அழகு சுந்தரமான பிள்ளையை எந்தப் பெண்ணும் பெறவுமில்லை. இனிமேல் பெறப் போவதுமில்லை. நீங்களோ நீங்கள் நினைத்தது போன்று எல்லா வடுக்களை விட்டும் தூய்மைப் படுத்தப்பட்டவர்களாக இருக்கும் நிலையில் படைக்கப்பட்டது போன்றிருக்கிறது" எனப்பாடியுள்ளார்கள்.

பத்ரு யுத்தத்தின் போது ஹழ்ரத் ஜாபிர் ﵁ நீண்ட ஒரு கவிதையைப் பாடினார்கள். அதன் இறுதியில்:

فيا خير خلق الله جاهك ملجئ　　وحبك ذخرى في الحساب ومؤئلى
عليك صلاة يشمل الال عرفها　　وأصحابك الأخيار أهل التفضل

"அல்லாஹ்வின் படைப்புகளில் அதிசிறந்த படைப்பான நாயகமே விசாரனை நாளன்று உங்களின் தலைமைத்தனம்தான் எனக்கு ஒதுங்குமிடம். உங்களின் உகப்புதான் எனக்கு தங்கரியம். அய்ஸுவரியம். மேலும், ஸலவாத் எனும் கருணா மாரியின் வாசனையாகிறது. தாங்களின் குடும்பத்தினரையும் வரிசையுடையவர்களான. சிறந்தவர்களான உங்களின் தோழர்களையும் பொதிந்ததாக இருக்கும் நிலையில் உங்கள் மீது உண்டாவதாக" எனப்பாடியுள்ளார்.

ஆதாரம்: *தாரீகுல் ஹமீஸ், பக்கம்: 386, பாகம்: I*

இதுமட்டுமல்ல, நாயகமவர்கள் ஹஸ்ஸான் இப்னு தாபித் ﵁ அவர்களுக்கு இஸ்லாத்தையும் நபியையும் புகழ்ந்து பாடி அக்காலத்து அநியாயக்காரர்களான புலவர்களின் கொட்டத்தை அடக்க மஸ்ஜிதுந்நபவியில் மேடை போட்டுக் கொடுத்தது மட்டுமன்றி, யா அல்லாஹ்! ஹஸ்ஸானை *ரூஹுல்*

குத்ஸ் எனும் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமைக் கொண்டு உறுதிப்படுத்துவாயாக! எனப் பிரார்த்தனையும் புரிந்துள்ளார்கள்.

அண்ணலாரை அவமரியாதையாகப் பேசியது மட்டுமல்லாமல் கவிதைகளும் இயற்றிய கஃபு இஸ்லாத்தை தழுவி இறைத்தூதரின் முன்னிலையில் நீண்ட ஒரு கவிதையைப்பாடினார். அக்கவிதைக்கு "பானத் ஸுஆது" எனப் பெயராகும். அதில்:

أنبئت أن رسول الله أوعدني   والعفو عند رسول الله مأمول

"அல்லாஹ்வின் தூதரிடத்தில் மன்னிக்கும் மனப்பாங்கு எதிர்பார்க்கப் படும் நிலையில் அல்லாஹ்வின் தூதர் எனக்கு எச்சரிக்கை செய்திருப்பதாக அறிவிக் கப்பட்டது".

فقد أتيت رسول الله معتذرا   والعذر عند رسول الله مقبول

"எனவே, ஏந்தல் நபி ﷺ அவர்களிடம் இரக்கம் காட்டும் பண்பு உண்டு என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் மன்னிப்பை நாடி வந்தேன்" எனவும் இன்னு மொரு இடத்தில்:

إن الرسول لسيف يستضاء به   مهند من سيوف الله مسلول

"உறையிலிருந்து உருவியெடுக்கப்பட்ட வாட்களுக்கு மத்தியில் அருமை நபிய வர்கள் இருட்டில் ஒளியைப்பாய்ச்சி வழிகாட்டப் பாவிக்கப்படும் இந்திய நாட்டு வாளுக்கு ஒப்பானவர்கள்" எனப்பா டினார்கள். இப்பாடலைப்பாடியபோது பாவிகளுக்கு பரிந்துபேசும் பண்புடைய நபி தனது திருமேனியில் இருந்த துப்பட்டியை கஃபுக்கு பொன்னாடையாகப் போர்த்தினார்கள் என்பது பிரபல்யம் அடைந்த வரலாறாகும்.

இஸ்லாமும் கவிதையும்

புனித மிகு புர்க்கான் வேதம் ஆகுமான கவிதைகளுக்கு ஆதரவு கொடுத்துள்ளது. இதுபற்றி குர்ஆனில்,

الشعراء يتبعهم الغاوون ألم تر أنهم في كل واد يهيمون وأنهم يقولون مالا يفعلون

إلاّالذين آمنوا وعملوا الصالحات وذكروا الله كثيرا وانتصروا من بعد ما ظلموا

وسيعلم الذين ظلموا أى منقلب ينقلبون

“கவிஞர்களை வழிகேடர்கள்தான் பின்பற்றுவார்கள். திடனாக அவர்கள் எல்லாத்திடலிலும் தட்டழிந்து திரிகிறார்கள் என்பதை, நபியே நீங்கள் பார்க்க வேண்டாமா? நிச்சயமாக அவர்கள் செய்யாத காரியங்களைச் செய்ததா கக் கூறுகிறார்கள். எனினும் எவர்கள் விசுவாசம் கொண்டு நற்கருமங்களைச் செய்து தங்கள் கவிதைகளில் அல்லாஹ்வை அதிகம் ஞாபகம் செய்து அநியா யத்திற்கு ஆளாக்கப்பட்டபின் உதவி பெற்றார்களோ அவர்களைத்தவிர அக் கிரமம் செய்தவர்கள் எங்கு தாம் திரும்பிச் செல்ல வேண்டுமென்பதை வெகு சீக்கி ரத்தில் அறிந்து கொள்வார்கள்.”

இவ்வசனங்கள் கவிஞர்களை வழிகெட்ட கவிஞர்கள் என்றும், நேர் வழியில் உள்ள கவிஞர்கள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளன. இதில் முதல் தரப்பினர் காபிர்களில் உள்ள கவிஞர்கள். இவர்களில் அதிகமானோர் அண்ணல் நபியை நிந்தித்து பாடல் இயற்றியவர்கள். மற்றும், சிற்றின்பத்தைத் தூண்டக்கூடிய பாடல் பாடுவோரும் இயற்றுவோரும் ஒருவனுக்கு இல்லாத வர்ணிப்புக்களை உண்டு என்று புகழ்பாடுவோரும் இதில் அடங்குவர். இப்படியான பாடல்களை இயற்றுவதும், பாடுவதும், பாடக்கேட்பதும் விலக்கலானதாகும். இப்படியான பாடல்களைக் குறித்துத்தான்:

لأن يمتلئ جوف أحدكم قيحاودما خيرله من أن يمتلئ شعرا

“உங்களில் ஒருவனுடைய வயிறு இரத்தத்தாலும் வாந்தியாலும் நிறைவது கவிதையால் நிறைவதை விட அவனுக்கு சிறந்ததாக இருக்கும்” என கோமான் நபியவர்கள் நவின்றுள்ளார்கள்.

எவர்கள் முஃமீன்களாக இருப்பதுடன் தங்களுடைய கவிதைகளில் இறைவனையும், அவனது தூதரையும் அதிகம் ஞாபகம் செய்து, மற்றும் நற்கருமங்களைச் செய்வதின் பேரில் ஆசை ஊட்டக்கூடிய பாடல்களை இயற்றிப்

பாடுகிறார்களோ இவர்கள் நல்லவர்கள். இவ்வாறான பாடல்களைப் பாடுவதும், இயற்றுவதும், கேட்பதும் நன்மை பயக்கும். இதனை விளங்கப் படுத்தியே:

إن من الشعر حكمة

"நிச்சயமாகக் கவிதையில் ஞானம் உண்டு" என நபிகள் கோமான் ﷺ அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

எனவே, மேற்கூறப்பட்ட வாசகங்களின் மூலம் கவிதைகளில் புகழுக்குறியதும் உண்டு, இகழுக்குறியதும் உண்டு என்பது புலனாகின்றது. ஆகவே, நபிகளாரின் மீது புகழாக கட்டப்பட்ட புகழ்பாடல்களிலோ, அல்லது ஸஹாபாக்கள், இமாம்கள், அவ்லியாகள் பேரில் கட்டப்பட்ட பாடல்களிலோ எவ்விதக்குறையும் காணமுடியாது. அப்படி யாராவது கண்டால் அவர்கள் கண் இருந்தும் குருடர்களே. எனவே, நபிமார், ஒளிமார்களின் புகழ் பாடல்களைப்பாடுவோருக்கும் கேட்போருக்கும் நன்மையுண்டு. இதைக்குறித்தே *அல்லாமா ஸதகதுல்லாஹில் காஹிரி குத்திஸ ஸிர்ருஹு வித்ரிய்யாவின் தக்மீஸில்:*

جواهر نظمی فی مدیح محمد يضيئ جميع الدهر غير محمد

فمادحه ان تلقى النار تخمد جنان نعيم أجر مادح أحمد

ومصغ وكل بالحسان يزوّج

"நாயகம் ﷺ அவர்களின் புகழில் நான் கோர்த்திருக்கும் பைத் எனும் நவரத்தினங்களாகிறது. அணைக்கப்படாமல் எக்காலமும் ஒளியைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். இன்னும் நாயகத்தைப் புகழ்ந்து பாடியவர்களை நரகம் சந்தித்தால் நரகம் அணைந்து போகும். ஏனெனில், அஹ்மது ﷺ அவர்களை புகழ் பாடியவனுக்கும், அதைச் செவி தாழ்த்திக் கேட்பவனுக்கும் கூலி சுகபோகங்கள் நிறைந்த சுவர்க்கமல்லவா. இன்னும் இவர்கள் அனைவருக்கும் ஹூருல் ஈன்களை திருமணம் முடித்தும் கொடுக்கப்படும்" என அழகாகப்பாடியுள்ளார்கள்.

ஷிர்க் என்பதன் விளக்கம்

இன்று உள்ள அரைவேக்காடுகள் நபி புகழில் ஷிர்க் இருக்கிறது, குப்ர் இருக்கிறது என்றெல்லாம் ஊளையிட்டுத்திரிவதை நாம் கேள்விப்படுகிறோம். அவர்கள் மார்க்கத்தை சரிவர விளங்காதவர்கள் அல்லது நபிகள் மீது பொறாமை கொண்டு அன்னாரின் அந்தஸ்திற்கு குறையை ஏற்படுத்த விரும்பும் யஹூதி, நஸாராக்களின் கூலியாட்கள் முந்தியவர்களைத் திருத்தலாம். இவர்களைத்திருத்தவே முடியாது.

ஷிர்க் என்பது:- அல்லாஹ்வைப்போன்று சுயமாக இயங்கக் கூடிய இன்னொன்று இருக்கின்றது என்று நம்பிக்கை கொண்டால் தான் ஷிர்க்காகும். படைப்புகள் அல்லாஹ்வின் குணாதிசயங்கள் வெளியாகும் ஸ்தானங்கள் என்ற அடிப்படையில் அவர்களை வர்ணிப்பதை ஷிர்க் என்று சொல்ல முடியாது. ஏனெனில் அல்லாஹ் *குர்ஆனில்:*

لقد جاء كم رسول من أنفسكم عزيز عليه ما عنتم
حريص عليكم بالمؤمنين رءوف رحيم

"நிச்சயமாக உங்களில் அதிசிறந்த கோத்திரத்திலிருந்து ஒரு தூதுவர் உங்களிடம் வந்துள்ளார்கள். நீங்கள் பாவத்தில் ஈடுபடுவது அவர்களுக்கு வருத்தமாக இருக்கின்றது. மேலும், உங்களின் பேரில் பேராசை உடையவராக இருக்கின்றார்கள். மேலும் முஃமின்களுக்கு இரக்கம், கருணை காட்டக் கூடியவர்கள்." (சூரத்துத் தௌபா : 128)

இங்கு தனக்குச் சொந்தமான பெயர்களில் இரு பெயர்களான رءوف رحيم என்ற பெயர்களைக் கொண்டு நாயகத்தை வர்ணிக்கின்றான் என்றால், அவர்கள் இரக்கம், கிருபை வெளியாகும் ஸ்தலமாக இருக்கும் காரணத்தினால்தான். இது போன்றே தான் ஏனைய திருநாமங்களும்.

உலக நடவடிக்கைகளில் இன்னார் இன்ன நாட்டிற்கு அதிகாரி இன்ன வீட்டுக்கு இன்னார், சொந்தக்காரன் இன்ன நாட்டுக்கு இன்னார் அரசன் இன்னாருக்கு இன்னார் பாதுகாவலன் என்றெல்லாம் அல்லாஹ்வுக்குச் சொந்

தமான. திருநாமங்களைச் சேர்த்துச் சொல்கின்றோம். அல்லாஹ்வின் திருநாமங் களை அடியானோடு சேர்ப்பது ஷிர்க் என்றால் அகிலம் இயங்க முடியாது. மனிதனைப்பார்த்து பார்ப்பவன், பேசுபவன், கேட்பவன், கொடுப்பவன், உதவி செய்பவன், அறிவுள்ளவன் என்றெல்லாம் சொல்ல முடியாது. இவைகள் அத்தனையும் அல்லாஹ்வின் பண்புகள். ஆனால், இப்பண்புகள் யாவும் அவனுக்கு சுயமானது. அடியானுக்கு இரவலாகக் கொடுக்கப்பட்ட வைகள். இத்தகைய விளக்கங்களை வைத்துத்தான أنت غفار الخطايا போன்ற சொற்களைக் கொண்டு இமாம்கள் நபியை வர்ணித்துள்ளார்கள்.

أنت غفار الخطايا

"நாயகமே! நீங்கள் பாவங்களை அதிகமதிகம் மன்னிப்பவர் கள்". மன்னிக்கும் மனப்பான்மை அல்லாஹ்வுக்கு உரியதுதான். எனினும் அது அடியானிலும் வெளியாகிறது. மன்னிக்கும் மனப்பான்மை நற்குணங் களைச் சேர்ந்ததாகும்.

وانك لعلى خلق عظيم

"நாயகமே! நிச்சயமாக நீங்கள் வலுப்பம் வாய்ந்த நற்குணத்திலே இருக்கின் றீர்கள்" எனக் கூறியுள்ளான். அத்துடன்,

بعثت لأتمم مكارم الأخلاق

"நான் நற்குணங்களை சம்பூரணப்படுத்தவே அனுப்பப்பட்டுள்ளேன்" என எம் பிரான் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

பிறர் தனக்குச் செய்த தவறை மன்னிப்பது நற்குணத்தைச் சார்ந்தது. ஏன், தன்னை விமர்ச்சித்து பாடல்கள் இயற்றிய கஃபுக்கு காருண்ய நபி மன்னிப்புக் கொடுக்கவில்லையா?

அன்று அண்ணலாரை விமர்சித்து பாடல்கள் இயற்றிய புலவர்களில் கஃபிப்னு ஸுஹைர் ؓ அவர்களும் ஒருவர். கஃபின் தந்தையான ஸுஹைர் என்பவர் அக்காலத்தில் புகழ்மிக்க கவிஞர்களில் ஒருவராக இருந்தார். அரபு மண்ணில் ஒரு பகுதியை அக்காலத்தில் ஆட்சி செய்த ஹரிம் என்ற அரசனின் அவைப் புலவராக இருந்த ஸுஹைர் மன்னனைப் புகழ்ந்து பல கவிதைகள் பாடி மன்னனை மகிழ்வித்து பல பரிசில்களும் பெற்றார். இதைத்தான் **இமாம்**

பூஸரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்:

ولم أرد زهرة الدنيا التي اقتطفت

يدا زهير بما أثنى على هرم

ஹரிம் என்ற அரசனைப் புகழ்ந்து கவிதை பாடி ஸுஹைர் என்ற கவிஞர் இரு கைகளி னாலும் இவ்வுலகத்தின் பரிசில்களைக் கொய்து கொண்டு அப்படியான இவ்வுலக ஆசாபாசங்களால் நபிகளாரை நான் புகழ்வதின் மூலம் நாடவில்லை எனப்பாடியுள்ளார்கள்.

இப்படியான புலவரின் மகனான கஃபு இஸ்லாத்தைத் தழுவ முன் நபிகளாரை விமர்சித்துப் பல கவிதைகள் பாடியுள்ளார். இவரின் சகோதரரான புஜைர் என்பவர் மதீனாவுக்குச் சென்று மா நபியின் பொன்மொழிகளால் ஈர்க்கப்பட்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

தனது சகோதரர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட விடயத்தை கஃபு அறிந்து சினம் கொண்டார். புஜைருக்கு ஒரு கவிதையை எழுதி, கடிதத்தை அனுப்பி வைத்தார். அதில் கஃபு குறிப்பிட்டிருந்ததாவது,

புஜைரே! உனக்குக் கேடு நிகழ்ந்தது. நீ கூறிய ஏகத்துவக் கலிமாவில் உனக்கு உள்நோக்கம் ஏதுமுண்டோ? நம்பப்பட்டவர் (முஹம்மது ﷺ) அவர்கள் ஏகத்துவ மொழியினால் ஒரு முறையோ இரு முறையோ உனக்கு மதுவை புகட்டிவிட்டார். எனவே, நீ அன்னாரைப் பின்பற்றியதால் நம் முன்னோர்கள் காட்டிய நேர் வழியை விட்டும் அகன்று விட்டாய். பிறரின் கெடுதியினை நீயும் அடைந்து விட்டாயோ! அந்தப் புதுவழி உனக்கு எதைத்தான் அறிவித்ததோ! உன் தாயும், தந்தையும், தம்பியும் தழுவாத நெறியை, அறியா வழியை நீ அடைந்துவிட்டாயோ? நீ அந்த வழியை உதறித் தள்ளிவிட்டுத் திரும்பவில்லையென்றால் உனக்கு ஏற்படும் கஷ்டங்கள், கவலைகள் குறித்து நான் கவலைப்படமாட்டேன். உன் அல்லல்களுக்கு நான் ஆறுதல் கூறமாட்டேன். இவ்வாறு கருத்துக்கள் அமைந்த கடிதம் கிடைக்கப் பெற்ற புஜைர் அவர்கள் சகோதரர்களின் மீது ஆத்திரமுற்று அம்மடலை அண்ணலவர்களிடம் படித்துக்காட்டினார். உடனே நபிகளாரவர்கள் தம் தோழர்களைப்பார்த்து, உங்களில்

யாராவது க..பிப்னு ஸுஹைரை சந்திக்க நேரிட்டால் உடனே அவரைக் கொன்று விட வேண்டும் எனக்கட்டளை பிறப்பித்தார். உடனே புஜைர் தன் சகோதரனுக்கு கவிதையிலேயே பதில் எழுது கிறார்கள். அதில் வலிமை மிக்க நிலையிலுள்ள வாய்மைத் திருமொழியான கலிமாவைப் பொய்யான முறையில் பழித்துரைக்கும் உன்னுடைய உள் நோக்கம் என்ன? அல்லாஹ் ஒருவனை நோக்கி மட்டுமே நீ மீளுவாயாக! லாத், உஸ்ஸா எனும் கற்சிலைகளை நோக்கி மீளாதே! இணை வைத்தல் என்ற அசுத்தம் படாத தூய உள்ளம் பெற்ற முஸ்லிம்களைத் தவிர வேறு மனிதர்கள் எவரும் ஈடேற்றமும் பாதுகாப்பும் பெறாத நாளான மறுமையில் உனக்கு ஈடேற்றம் பாதுகாப்பு வேண்டுமெனில் அல்லாஹ்வை மட்டும் நோக்கியே நீ மீள வேண்டும். எனவே, நம் தந்தையின் மார்க்கமும் பாட்டனின் மார்க்கமும் எந்தப்பயனுமற்ற மார்க்கமாகையால் அது எனக்கு விலக்கப்பட்ட மார்க்கமாகும்.

இவ்வாறு தம் சகோதரருக்குக் கவிதையில் பதில் கடிதம் எழுதிய புஜைர் அதன் கீழ் எழுதிய குறிப்பில் தம்பி! உன் உதிரத்தைப் பழிக்குப் பழியில்லாமல் ஓடச் செய்ய உம்மி நபிகளார் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அன்னாரின் பொன் மனத்தை புண்படச் செய்து வசை கவிபாடிய பல்வேறு கவிஞர்களைக் கொலை செய்ய ஆணை பிறப்பித்துள்ளார்கள். இப்னு ஸ..ப்ரீ? ஹுபைறத் இப்னு அபீலஹப் போன்ற எஞ்சிய குறைஷிக் கவிஞர்கள் மக்காவை விட்டே ஆளுக் கொரு திசையில் ஓடி மறைந்துள்ளனர். இந்நிலையில் நீ உயிர் தப்பு வாய் என்று யான் நம்பவில்லை. எனவே, உன் உயிர் உனக்குத் தேவையானால் நபிகளாரிடம் வந்து சரணடைந்து விடு. ஏனெனில், பாவமன்னிப்புக் கோரிய நிலையில் தன்னிடம் வருவோரை நபியவர்கள் ஒப்புக் கொள்வார்கள். இஸ்லாமிய நெறியை ஏற்பதற்கு முன்னர் செய்துவிட்ட தவறுகளுக்காக நபியவர்கள் தண்டனை கொடுக்க மாட்டார்கள் என்றும் எழுதினார்கள். புஜைரின் பதில கடிதம் பெற்ற க..பு நபிகளாரின் தண்டனையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, தன்னுடைய முஸைனாக் கோத்திரத்தாரிடம் உதவி கோரி நின்றார். அவர்கள் அதற்கு மறுக்கவே க..புக்கு இப்பூமியே நெருக்கடியாகி விட்டது என்பது புலனாகியது. அவர் தன் உயிருக்கு அஞ்சினார். அவருடைய எதிரிகள் அவரை மிரட்டி நீ கொலை செய்யப்படுவாய் என்றனர்.

இந்நிலையில் கவிஞர் க..பின் உள்ளம் மாறியது. குப்ர் எனும் காரிருள் கவ்விய

கஃபின் நெஞ்சில் இஸ்லாமெனும் கதிரவன் தன் ஒளிக்கதிர்களைப் பாய்ச்சத் தொடங்கினான். எனவே, அவர் மதீனா மாநகர் நோக்கி வந்து தனக்கு ஏற்கனவே அறிமுகமான ஜுஹைனா கோத்திரத்து மனிதர் ஒருவரின் வீட்டில் வந்து இறங்கினார். எனவே, அவர் கஃபை மஸ்ஜிதுந் நபவியை நோக்கி அழைத்து வந்தார். பின்னர் நபிகளாரைக் காட்டி இவர்கள் தான் அல்லாஹ்வின் திருத்தூதர் என்றார். இவர்களின் முன் நின்று அவர்களிடம் பாதுகாப்புத் தேடு என்றார்.

அந்நேரம் அண்ணலாரைச் சூழ்ந்து அருமைத் தோழர்கள் அமர்ந்திருந்தனர். இந்நிலையில் மாநபியின் முன்னிலையில் அடக்கத்துடன் வந்து நின்று கவிஞர் கஃபு நபிகளாருக்கு முன் மண்டியிட்டு அமர்ந்து அவர்களின் பொற்கரத்தைப் பிடித்து அல்லாஹ்வின் திருத்தூதரே! கவிஞர் கஃபை நான் அழைத்துக் கொண்டு உங்கள் முன்னர் வந்தால் அவர் பாவமன்னிப்புக் கோரி முஸ்லிமான நிலையில் தங்கள் முன் நிற்கும் போது அவரைத் தாங்கள் ஒப்புக் கொள்வீர்களா? என்று கேட்டார்.

அதற்கு அண்ணலாரவர்கள், ஆம், என்றவுடன் அல்லாஹ்வின் தூதரே நான் தான் கஃபு என்றார். கஃபு இவ்வாறு தன்னை அறிமுகம் செய்ததும் சபையில் சற்று சலசலப்பு ஏற்பட்டது. இவர் முன்னர் தன்னுடைய அண்ணன் புஜைருக்கு எழுதிய கவிதை மடலினை பெற்றிருந்த நம்பப்பட்டவர் (நபிகளார்) உனக்கு ஏகத்துவக் கலிமா எனும் மதுவைப் புகட்டினார் என்ற வசனம் குறித்து சிறிது விவாதம் எழுந்தது. அந்நேரம் அன்ஸாரிகளில் ஒருவர் கஃபை நோக்கி சீறிப்பாய்ந்து அல்லாஹ்வின் திருத்தூதரே! விட்டு விடுங்கள். இவரின் கழுத்தை நான் வெட்டுகிறேன் என்று சப்தமிட்டார். அப்போது அண்ணலார் அவரைத் தடுத்து இவரை விட்டு விடுங்கள். இவர் குப்ரை விட்டு வெளியேறிய நிலையில் பாவமன்னிப்புக் கோரியவராக நம்மிடம் வந்து விட்டார் என்று கூறினார்கள்.

அந்நேரம் தன் முந்தைய தவறுக்கு வருந்திய கவிஞர் கஃபின் உள்ளம் வருந் தியது. பானத்சுஆது எனும் கவிதையைப் பாடினார்கள்.

தனக்குக் கொடுமை விளைவித்த தாயிபு வாசிகளுக்கு மன்னிப்புக் கொடுக்க வில்லையா?

நாயகம் ﷺ அவர்களின் சிறிய தந்தை அபூதாலிபும் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் மரணிக்கவே விரோதிகளின் அட்டகாசங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்க நபியவர்கள் சகிக்க முடியாமல் தாயிபுக்குப் போய் மூன்று நபர்களிடம் உதவிதேட அச்சண்டாளர்கள் உதவி செய்வதற்குப் பதிலாக உபத்திரவம் செய்தார்கள்.

அவர்களில் ஒருவன் நாயகத்தைப் பார்த்து கஃபாவின் பிடவையைத் திருடுகின்ற உன்னையா அல்லாஹ் நபியாக அனுப்பினான் எனக் கேட்டான். மற்றவன் உன்னை நபியாக அனுப்ப அல்லாஹ்வுக்கு வேறு ஒருவன் பஞ்சமோ எனக் கேட்டான். மூன்றாமவன், நீ நபியாக இருந்தாலும் நான் உம்மோடு பேசத்தகாது நபியாக இல்லாவிட்டாலும் பேசத்தகாது என்றான். இவைகளைக் கேட்ட நபியவர்கள் நீங்கள் எனக்கு உதவி செய்யாவிட்டாலும் என் விடயத்தை மற்றவர்களிடம் கூறி எனக்குக் கஷ்டத்தை வருத்திக் கொடுக்காதீர்கள் என்றார்கள். எனினும் அவ்வன்நெஞ்சக்காரர்களோ நபிகளாரைப் பார்த்து நீர் எமது ஊரை விட்டும் ஓடிவிடும், உம்மைப் பாதுகாக்கும் பூமிக்குப் போய்ச் சேரும் என்று சொல்லி விட்டு மடையர்களையும் கெட்டவர்களையும் நாயகத் தைத் துன்புறுத்தத் தூண்டி விட்டனர். அவர்கள் நாயகத்தைப்பார்த்துப் பரிகாசம் பண்ணினார்கள். கூக்குரலிட்டார்கள். இது காதில் விழுந்த ஊர் மக்கள் நாய கத்திற்கு கல்லால் எறிந்தார்கள். நாயகம் அடி எடுத்து வைக்கும் போதெல்லாம் காலில் கற்களை எறிந்தார்கள் இதனால் நாயகத்தின் புனிதமிகு கால்களிலிருந்து இரத்தம் வடிந்தது. நாயகம் ﷺ அவர்கள் தடுக்கி விழுந்து விட்டால் அவர்களில் ஒருவன் வந்து அவர்களைத் தூக்கி விடுவான். நாயகம் நடப்பார்கள். பிறகும் கற்களினால் காலுக்கு அடிப்பார்கள். இதற்கெல்லாம், நாயகத்தோடு போயிருந்த ஸெய்திப்னு ஹாரிதா ؓ அவர்கள் தன்னுடைய தலை பிளக்கும் வரை ஈடு கொடுத்தார்கள். அப்பால் அம்மூதேவிகளை விட்டும் கால்களில் இரத்தம் வடிய வடிய உத்பா, ஷய்பாவுடைய தோட்டம் வந்து சேர்ந்தார்கள். அவ்விரு வரும் நாயகத்தின் விரோதிகளாக இருந்தபடியால் நாயகத்துக்கு அவர்களைக் கண்டது கவலையாக இருந்தது. பின்பு அவ்விருவரும் நாயகத்தின் வருத் தத்தைக் கண்டு இரத்தப்பாசத்தினால் தமது நஸாரா அடிமை அதாஸ் என்ப வரை அழைத்து முந்திரிகைக் குலை பறித்து தாம்பாழத்தில் வைத்து அதோ! அந்த மனிதருக்குக் கொண்டு போய்க் கொடு என்றார்கள். அவர் அப்படியே கொண்டு போய்க் கொடுக்க நம் நபியவர்கள் பிஸ்மில்லாஹ் என்று அதைச்சாப்பிட

ஆரம்பிக்க அதாஸ் என்பவர் நாயகத்தின் முகத்தைப் பார்த்து இப்பேச்சு இந்த ஊர்களில் உள்ள பேச்சு இல்லையே என்று கூற நபியவர்கள் அவரைப் பார்த்து உமக் கெந்த ஊர்? உமது மார்க்கம் எது? எனக் கேட்க நான் நஸாரா. எனது ஊர் நய்னுவா எனும் பட்டினம் என்றார். நபியவர்கள் ஸாலிஹான மனிதர் யூனுஸ் இப்னு மத்தாவுடைய பட்டினம் என்றார்கள். அப்போது அந்த அதாஸ் என்பவர் நாயகத்தைப் பார்த்து யூனுஸ் இப்னு மத்தாவைப்பற்றி உமக்கு எப்படித் தெரியும்? நான் நய்னுவா என்ற பட்டினத்தை விட்டும் பிரிந்து இதுவரை யூனுஸ் இப்னு மத்தா யார்? என்று அறிந்த பத்துப் பேரையாவது இந்தப் பிரதேசங்களில் நான் காணவில்லை. நீர் ஓதப்படிக்கத் தெரியாத கூட்டத்தில் உள்ளவர் எப்படி அறிந்தார்? எனக் கேட்டார். அப்போது நாயக மவர்கள், யூனுஸ் இப்னு மத்தா என்பவர் எனது சகோதரர். அவர் ஒரு நபியாக இருந்தார். நானும் ஒரு நபி என்றார்கள். உடனே அதாஸ் என்பவர் நாயகம் ﷺ அவர்களின் கையையும் காலையும் முத்தமிட்டார். இதை உத்பாவும் ஷைபாவும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதன் பின் அதாஸ் நாயகத்திடமிருந்து திரும்பவே அவரைப் பார்த்து உத்பாவும் ஷைபாவும் உனக் கென்ன கேடு பிடித்தது? ஏன் அவரின் கையையும் காலையையும் பிடித்து முத்தமிட்டாய் எனக் கேட்டார்கள். அதற்கு அதாஸ் அவரைக்காண சிறந்த வஸ்து இப்பூமியில் இல்லை. நபியைத் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்களே அப்படியான செய்திகளெல்லாம் அவர்களுக்குத் தெரிகிறது என்று சொன்னார். உடனே உன்னை அவர் உன்னுடைய மார்க்கத்தை விட்டும் அப்புறப்படுத்திவிட வேண்டாம். உமது மார்க்கம் அவரின் மார்க்கத்தை விட மேலானது எனச் சொன்னார்கள். இந்த அதாஸ் என்பவர் இஸ்லாமாகி பத்ரு யுத்தத்திற்கு முன் மரணித்து விட்டார்.

நாயகம் ﷺ அவர்கள் சொன்னார்கள்: நான் அந்த இடத்தை விட்டு கவலை யோடு அகன்று *கர்னுத்த ஆலிபில்* எனும் இடம் வந்து சேர்ந்து தலையை உயர்த்தினேன். ஒரு மேகம் எனக்கு நிழல் கொடுத்துக் கொண்டு வருகிறது. பார்த்தேன் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அந்த மேகத்துக்குள்ளிருக் கிறார்கள். அவர்கள் என்னைபார்த்து அல்லாஹ்வுடைய தூதரே தங்களுடைய கூட்டம் தாங்களுக்குச் செய்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தவன். மலைகளுக்குச் சாட்டப்பட்ட மலக்குகளைக் கொண்டு என்னை அனுப்பினான். அந்த காபிர்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் சொல்லுங்கள் என்

றார்கள். அவ்வேளையில் மலைகளுக்குச் சாட்டப்பட்ட மலக்குகளில் ஒருவர் எனக்கு சலாம் சொல்லி தாங்கள் நாடினால் இந்த இரண்டு மலைகளையும் பிடுங்கி காபிர்கள் மீது வைத்து அவர்களை அரைத்து விடுகிறோமென்று சொன்னார். இது கேட்ட நான் அப்படிச் செய்ய வேண்டாம். இவர்கள் இல்லா விட்டாலும் இவர்களின் சந்ததிகளாவது அல்லாஹ்வுக்கு வழிப்படப் போதும் எனச் சொன்னேன். அப்போது அம்மலக்குகள் அல்லாஹ் உங்களுக்கு "ரஊபுர் ரஹீம்" எனப் பெயரிட்டிருப்பது சரிதான் எனச் சொல்லி விட்டுப் போய் விட்டார்கள். இதைத்தான் **ஸதகதுல்லாஹில் காதிரி ﷺ அவர்கள்:**

اطاعك أملاك الجبال كخدم ولم ترض وضع الأخشبين بمصدم

رجاء لنسل صالح بمقدم مضضت رضيعا ثدىمن جف من دم

مجاعا ففاض الدر وهم سجيم

"அல்லாஹ்வின் தூதரே! மலைகளுக்கு சாட்டப்பட்ட மலக்குகள் உங்களுக்கு ஊழியம் செய்வோர் போன்று அந்த தாயிபு வாசிகளை அழித்து விட அனுமதி கேட்டார்கள். நீங்களோ பிற்காலத்தில் அவர்களில் ஸாலிஹான மக்கள் தோன்றுவார்கள் என எதிர்பார்த்து நசுக்கி அழித்து விட விரும்பவில்லை" எனப் பாடிக்காண்பித்துள்ளார்கள்.

இச்சம்பவத்தில் அண்ணலாரின் கையையும் காலையும் அதாஸ் முத்தமிட் டுள்ளார். இச்செயலை நபியவர்கள் ஷிர்க் என்றோ, குப்ர் என்றோ கூறவுமில்லை. தடுக்கவுமில்லை. அப்படியானால் நபிமார்கள், ரசூல் மார்கள், ஸாலிஹீன்களின் கைகளை, கால்களை முத்தமிடலாம் என்பது இங்கிருந்து புலனாகிறதல்லவா!

இன்னும் இது சம்பந்தப்பட்ட சில ஹதீஸ்களை முன்வைக்கின்றோம்:

وعن صفوان بن عسال رضى الله عنه قال: قال يهودى لصاحبه إذهب بنا إلى

هذا النبي فأتيا رسول الله صلى الله عليه وسلم فسألاه عن تسع آيات بينات

فذكر الحديث إلى قوله فقبلا يده ورجله وقال نشهد أنك نبيّ

رواه الترمذى

ஹழ்ரத் ஸப்வான் இப்னு அஸ்ஸால் ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு யஹூதி தன் நண்பரைப்பார்த்து என்னை இந்த நபியிடம் அழைத்துச் செல் என்றார். அவ்வாறு அவ்விருவர்களும் நபியவர்களிடம் வந்தார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அருளப்பட்ட தெளிவான ஒன்பது அத்தாட்சிகளைப் பற்றிக் கேட்டார்கள். இது சம்பந்தமான செய்திகளை ஸப்வான் இப்னு அஸ்ஸால் கூறி விட்டு கடைசியாகக் கூறினார்கள். அவ்விருவரும் அண்ணலாரின் கைகளையும் கால்கலையும் முத்தமிட்டார்கள். நிச்சயமாக தாங்கள் நபிதான் என நாங்கள் சான்று பகர்கின்றோம் எனவும் கூறினார்கள்.

وعن ابن عمر رضي الله عنهما قصة قال فيها فدنونا
من النبي صلى الله عليه وسلم فقبلنا يده رواه ابوداود

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா ஒரு நிகழ்ச்சியைக் கூறிவிட்டு அதில் நாங்கள் நாயகம் ﷺ அவர்களை நெருங்கினோம். அவர்களின் கையை முத்தமிட்டோம் எனக் கூறினார்கள்.

وعن عائشة رضى الله عنها قالت: قدم زيد بن حارثة المدينة
ورسول الله صلى الله عليه وسلم في بيتي فاتاه فقرع الباب فقام
اليه النبى صلى الله عليه وسلم يجر ثوبه فاعتنقه وقبله
رواه الترمذى

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹழ்ரத் ஸைது இப்னு ஹாரிதா ﵁ அவர்கள் வெளியூரிலிருந்து மதீனா வந்தார்கள். அப்போது நபியவர்கள் என் வீட்டிலிருந்தார்கள். வந்த ஸைதிப்னு ஹாரிதா வீட்டுக் கதவைத் தட்டினார். உடனே அண்ணலவர்கள் எழுந்து தங்கள் ஆடையை இழுத்தவர்களாக வாயிலுக்கு விரைந்து வந்து அவரை (அன்போடு வரவேற்று) முஆனகா (கட்டியணைத்து) ஆலிங்கனம் செய்தார்கள். முத்தமிட்டார்கள்.

இதிலிருந்து நல்லவர்கள், பெரிய மனிதர்கள் ஸாலிஹீன்களின் கைகளைக் கால்களை முத்தமிடுவது ஆகுமான பிரயாணத்திலிருந்து வந்தவர்களை கட்டியணைத்து ஆலிங்கனம் செய்வது, முத்தமிடுவது இஸ்லாத்தில் அங்கீகரிக்

கப்பட்ட விடயம் என்பது புரிகின்றதல்லவா!

அண்ணலாரின் புகழுக்கு அளவு இல்லை

அண்ணல் நபியவர்களின் அழகான வர்ணனைகளுக்கு எல்லை கிடையாது. ஏனெனில் அவர்கள் குர்ஆனைக் கொண்டு குணம் பெற்றவர்கள். அன்னை ஆயிஷா ரழியல்லாஹூ அன்ஹா அவர்களிடம் அண்ணலாரின் குணங்கள் எவ்வாறு இருந்தது? எனக் கேட்கப்பட்ட போது, كان خلقه القران **"அவர்களின் குணம் குர்ஆனாகவே இருந்தது"** எனப்பதில் கூறினார்கள். அப்படியானால் அல்-குர்ஆனின் நிலை:

لو كان البحر مدادا لكمات ربى لنفد البحر قبل
أن تنفد كلمات ربى ولو جئنا بمثله مددا

"அல்லாஹ்வின் அருள்மறையின் விளக்கத்தை அலை அடிக்கும் கடலின் தண்ணீரை மையாக்கி எழுதினாலும், கருத்துக்களை எழுத முன் முடிந்துவிடும். அது இன்னொரு கடலின் தண்ணீரை மையாக்கின போதிலும் சரிதான்".
(சூரத்துல் கஹ்ப்: 109)

பிறிதொரு இடத்தில்:

ولو انما في الارض من شجرة اقلام والبحر يمده من بعده سبعة ابحر
ما نفدت كلمات الله ان الله عزيزحميم {سورة لقمان ٢٨}

ஏழு கடல்களின் தண்ணீரை மையாக்கி உலகத்தில் உள்ள மரங்களின் குச்சிகளையெல்லாம் பேனாக்களாக்கி குர்ஆனின் விரிவுரையை எழுதினாலும் எழுதி முடிக்கவே முடியாது. இது இவ்வாறிருக்க குர்ஆனைக் குணமாகக் கொண்ட கருணை நபியை எப்படி வர்ணித்துவிட முடியும்?

இதைக் குறித்தே **அல்லாமா ஸதகதுல்லாஹில் காஹிரி** ﷺ அவர்கள்:

لوالبحرحبرا فى فضائل أحمد ويكتبها كل الورىدون مسمد

பொருளடக்கம்

لما نفدت كلا بدهر مؤمد   لتورة موسى فاسئلوا عن محمد
فقل لكم ما للحبيب عديل

"முஹம்மத் ﷺ அவர்களின் வரிசைகளை எழுத ஏழு கடல்களை மையாக்கி அந்த வரிசைகளை மலக்குகள் உட்பட மற்றைய படைப்புகள் அடங்களும் சடைவு அடையாமல் எழுதினாலும் அந்த வரிசைகளை எழுதி முடிக்கவே முடியாது. மேலும், மூஸாவுக்கு கொடுக்கப்பட்ட தௌராத்தைப்பாருங்கள். பார்த்தால் எனது மூஸா உட்பட இந்த ஹபீபுக்கு எந்த நிகருமில்லை" என்றும் இன்னோரிடத்தில்:

صفائح علولوجعلن كواغدا   واقلامان الأشجارفالمدح ماأحصى

"நாயகமே! ஏழு வானங்களும் கடதாசியாக்கப்பட்டு மற்றும் மரங்கள் பேனாக்களாக்கப்பட்டு உங்களின் புகழை எழுதினாலும் அது அளவுக்கு கட்டுப்படாது". எனக் கூறியுள்ளார்கள். ஏன் நாயகம் ﷺ அவர்களின் அந்தஸ்தால் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டே போகின்றவர்கள். இதை அல்லாஹ்:

وللآخرة خير لك من الاولى

"நாயகமே! இவ்வுலக வாழ்வை விட மறு உலக வாழ்வே உங்களுக்கு சிறந்தது" என்பதாகக் கூறியுள்ளான். இருப்பினும் இன்னும் பல முபஸ்ஸிரீன்கள் நாயகமே! முன்னைய நிமிடத்தை விட பின்னைய நிமிடமே உங்களுக்குச் சிறந்த தாகும் என்பதுதான் இதன் விளக்கமாகும் எனக் கூறியுள்ளார்கள். எனவே, அவர்கள் பரிபூரணத்துவத்தில் எவ்வித முடிவுமில்லாமல் உயர்ந்து போகி றார்கள்.

இதைத்தான் அல்லாமா ஸதகதுல்லாஹில் காஹிரி رضي الله عنه அவர்கள்:

وما زلت تعلو في الفضائل كلما   مضى بك وقت زدت في الفضل قلما
مضت لحظة لم تعل في الفضل سلما   مقامك في أعلى مقام مكلما
دليل بان الشأن منك عظيم

"நாயகமே! தாங்கள் ஓயாமல் வரிசையில் உயர்ந்து கொண்டே போகிறீர்கள்.

தங்களைக் கொண்டு ஒரு வக்து செல்லும் போதெல்லாம் தாங்கள் அந்த வக்தில் வரிசையால் அதிகமாகிறீர்கள். தாங்கள் ஒரு படி ஏறாமல் ஒரு நொடிப்பொழுது செல்வதில்லை. நாயகமே! தாங்கள் அல்லாஹ்வுடன் உரிய ஸ்தானத்திலிருந்து பேசியவைகள் உங்களுடைய அந்தஸ்து மிக உயர்ந்தது என்பதற்கு போதுமான ஆதாரமாகும்" எனக் கூறினார்கள்.

இதன் மூலம் வள்ளல் நபியின் வரிசைக்கு எல்லை இல்லை. அவர்களின் வரிசையை வல்லவனான அல்லாஹ்வைத் தவிர வானவர்களும் அறிய மாட்டார்கள். மற்றவர்களும் அறியமாட்டார்கள். எனவேதான் **இமாம் பூசரி ரஹ்மதுலல்லாஹி அவர்கள்:**

كيف يستوعب الكلام سجايا ك وهل تنزح البحار الركاء

"நாயகமே! உங்களை வர்ணிக்கின்றவர்களின் பேச்சுக்கள், உங்களின் வர்ணிப்புக்களை எப்படி அடைய வளைந்து கொள்ளும்? கடல் நீரைப் பட்டையினால் இறைத்து முடிக்க முடியுமா? முடியாது" என்றும்,

ليس من غاية وصفك أبغي هاوللقول غاية وانتهاء

"தாங்களின் வர்ணிப்புக்களுக்கு நான் முடிவைத் தேடவில்லை. எனினும் எனது பேச்சுக்கு ஒரு எல்லையும் முடிவுமிருக்கின்றது அல்லவா! எனவேதான் முடிக்கிறேன்" என்று தனது இயலாமையை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இப்னுல் வர்ராக் அவர்கள்:

لقد خصه الرحمن منه بقربه وظلله فوق السماء بحجبه

فمن ذاالذي يحصى كرامة ربه صحابته لم تحص ماخصه به

اله البرايا ليت شعرى من يحصى

"நிச்சயமாக ரஹ்மான் அல்லாஹ் தனது ஹபீப் முஹம்மது ﷺ அவர்களை தன்னளவில் நெருங்க வைப்பது கொண்டு அவர்களைச் சொந்தப்படுத்தினான். மேலும், வானத்துக்கு மேலால் தனது திரைகளைக் கொண்டு நிழலிடச் செய்தான்.

கருமம் இப்படியிருக்க அவர்களின் ரப்பு அவர்களை எதைக் கொண்டு சோதப் படுத்தினான் என்பதை ஸஹாபாக்கள் கூட முற்றிலும் தெரியாமலிருக்க, மற்றவர் களில் யார் அதனை மட்டிட இருக்கின்றார்கள். எனவே, யார் அதனை மட்டிட்ட வர்கள் என்று நான் அறிய வேண்டி இருந்ததே". எனப்பாடியுள்ளார்கள் என்றால், எமது நிலை என்ன?

இன்று சிலர் நாயகம் நம்மைப்போன்ற மனிதர் தானே! என்றெல்லாம் பேசி தமது ஈமானையும் மற்றவர்களின் இமானையும் பழுதாக்குகின்ற நிலையைக் கண்டு கொண்டு இருக்கின்றோம். இப்படியான வழிகேடுகளிலிருந்து எங்க ளை அல்லாஹ் பாதுகாப்பானாக!

அண்ணலாரின் புகழ் பாடுதல் சுன்னத்து.

இன்று அண்ணலாரின் புகழ் பாடுதல், ஷிர்க் என்றும், பித்அத் என்றும் ஊளையிட்டு மக்கள் செய்து வந்த நன்மைகளையெல்லாம் தடுத்து அல் லாஹ்வினால் مناع للخير "நன்மையைத்தடுப்பவன்" என இகழப்பட்ட வலீத் இப்னு முஹீராவின் கூட்டத்தில் சேர்ந்திருப்பதை நாம் காண முடியும். இவர்கள் முற்றிலும் மடையர்கள். அல்லது அறிவு இருந்தும் அகப்பார்வை அற்றவர்கள். ஏனெனில், நபியைப்புகழ்வது புத்தியுள்ளோரின் வழிமுறை நபித் தோழர்களின் முன்னால் கூறப்பட்ட சம்பவங்கள் ஆதாரமாகவுள்ளன. மற்றும் ஷிர்க் என்றால் என்ன என்பது முன் கூறப்பட்டுள்ளது.

அண்ணாலாரின் புகழைப்பாடுவது சுன்னத்தாகும். ஏனெனில் அண்ணலார் தனது புகழை அருமைத்தோழர்கள் பாடுவதைக் கேட்டுள்ளார்கள். இல்லை, அதற்காக மஸ்ஜிதுந்நபவியில் மேடை போட்டுக் கொடுத்து ஆர்வம் ஊட்டி யுள்ளார்கள், அங்கீகரித்துள்ளார்கள், பிரார்த்தனை செய்துள்ளார்கள் என்பன வற்றையும் முன்னால் கண்டோம்.

எனினும், தற்காலத்தில் நடத்தப்படுகின்ற முறை பித்அதுன் ஹஸனிய்யாவா கும். எனவேதான் இப்னு அல்லாமுஸ்ஸித்தீக்கிய்யி ரஹ்மதுல்லாஹி அவர் கள் மௌலிதின் அடிப்படை சுன்னத்து இது. அருமைத் தோழர்கள் காலத் திலிருந்தே நடைபெற்று வந்துள்ளது எனக்கூறியுள்ளார்கள்.

பல அமல்கள் ஒன்று சேரும் முறையில் இவ்வைபவத்தை நடாத்தி வந்தவர் *இர்பில்* நாட்டு மன்னரான அல்முழப்பர் அபூஸஈதிப்னு ஸைனுத்தீன் என்பவ ராவர். இவர் ஹிஜ்ரி 630 –ல் வபாத்தானார். இவர் கீர்த்திமிக்க அரசராகவும், கொடைவள்ளலாகவும், அழகிய நற்குணங்கள் உடையவராகவும் காணப் பட்டார். மற்றும் லபஹூகாஸயூன் எனும் இடத்திலுள்ள *அல்–ஜாமிஉல் முழப்பர்* என்ற பள்ளியை நிர்மாணித்து பரிபாலனம் செய்தவர்களும் அவர் களே ஆவார்.

இவர்கள் பற்றி தாரீக் அல்பிதாயா வந்நிஹாயாவில் மலிகுல் முழப்பர் றபீ உல் அவ்வல் மாத்தில் மௌலித் மஜ்லிஸ்களை நடாத்தும் தன்மையுடை யவர்களாகவும், அதற்காகப் பிரமாண்டமான சபைகளை ஏற்பாடு செய்யக் கூடியவர்களாகவும் பெரும் தன்மையுடையவர்களாகவும், வீரராகவும், விவேகியாகவும், தலைசிறந்த ஆலிமாகவும், நீதி வழுவா மன்னராகவும் விளங்கினார்கள் எனக்கூறி அல்லாஹ் அவர்களுக்கு ரஹ்மத் செய்வானாக! எனப்பிரார்த்தனையும் புரிந்துள்ளார்கள்.

இவர்கள் நடாத்தி வந்த மௌலித் வைபவத்தை ஹிஜ்ரி 633–ம் ஆண்டில் வபாத்தான ஹதீதுக்கலையில் தேர்ச்சி பெற்ற அபுல் கத்தாப் இப்னு தஹிய்யாஹ் ரஹ்மதுல்லாஹி அவர்கள் ஏற்றுக் கொண்டதுடன் التنوير في مولد البشير النذير என்ற மௌலிது கிதாபையும் கோர்வை செய்து கொடுத்துள்ளார்கள்.

எனவே, மேற்கண்ட வாசகங்களின் மூலம் மௌலிதின் அடிப்படை சுன்னத்து, தற்கால செயல்முறை **பித்அதுன் ஹஸனிய்யாஹ்** – *அழகிய நூதனம்,* பித்அதுன் ஹஸனிய்யாஹ் என்பது, இமாம்கள் கூறியிருக்கும் البدع الحسنة متفق على ندبها பித்அதுன் ஹஸனாஹ் –அது சுன்னத் என்பது இமாம்களின் ஏகோபித்த முடிவின் சுன்னத்தாகும் என்ற அடிப்படையில் சுன்னத்து.

சுன்னத்து என்றால், அதற்கு இமாம்களின் வரைவிலக்கணம் مايثاب على فعله ولا يعاقب على تركه செய்தால் நன்மை கிடைக்கும். செய்யாவிட்டால் தீமையில்லை. இதன்படி மௌலிது மஜ்லிஸ்களை நடாத்து வது நன்மை பயக்கும் விடயமாகும். எனினும் அவைகளில் மார்க்கத்திற்கு

முரணான கருமங்கள் நடை பெறாமல் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும். அவ் வாறு நடைபெற்றால் அக்காரி யங்களைத் தடுக்க வேண்டுமே தவிர, மௌலிதைத் தடுக்கக்கூடாது. இதன் அடிப்படையிலேயே

مارآه المؤمنون حسنا فهو عند الله حسن

"எதனை மு:ஃமீன்கள் நல்லதெனக்கண்டார்களோ அது அல்லாஹ்விடத்திலும் நல்லதாக இருக்கும்" என்ற இப்னு மஸ்ஊத் ﷺ அவர்களின் வார்த்தை தெளிவுபடுத்துகின்றது. எனவே, மு:ஃமீன்கள் மௌலிதை நன்மை பயக்கும் காரியம் எனக்கண்டார்கள். அதற்குத்தீர்ப்பும் வழங்கியுள்ளனர்.

தீர்ப்பு வழங்கிய இமாம்களில் சிலர்

1. ஹிஜ்ரி 599 -ல் பிறந்த அஷ்ஷெய்க் ஸிஹாபுத்தீன் அபூ ஸாமா ரஹ்ம துல்லாஹி அலைஹி அவர்கள். இவர்கள் இமாம் நவவி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் ஆசிரியருமாவார்கள்.

2. ஹிஜ்ரி 911 -ல் வபாத்தானவர்களும் 600 -க்கும் மேற்பட்ட மார்க்கக் கிரந்தங்களை எழுதியவருமான அபுல் பழ்ல் ஜலாலுத்தீன் அப்துர் ரஹ்மான் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.
3. இப்னு ஹஜ்ர் அஸ்கலானி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

4. இப்னு ஹஜர் மக்கிய்யி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

5. கைஸய்னி தஹ்லான் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

6. அல்-ஹாபிழ், அல்-இராகிய்யி ரஹ்மதுல்லாஹி அலைஹி ஆவர்கள்.

7. இப்னு ஆபிதீன் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

8. அஷ்ஷெய்க் முஹம்மது முதவல்லியிஸ்ஸ:ஃராவிய்யி ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்றோராவர்.

இன்னும் இதுபோன்ற பல இமாம்கள் இதற்கு தீர்ப்பு வழங்கியுள்ளதையும் கிரந்தங்களில் காணலாம். இவைகளைப் புரியாமல் இவ்வைபவங்கள் இந்தியாவிலிருந்து வந்தோர் வயிறு வளர்ப்பதற்காக ஆரம்பித்து வைத்தார்கள் என்பது சுத்த மடத்தனமாகும்.

இம்மஜ்லிஸ்களில் ஓதுவதற்காக கிதாபுகளை கோர்வை செய்து கொடுத்த இமாம்களில் சிலர்:

1. அல்–ஹாபிழ் முஹம்மதிப்னு அப்துல்லாஹில் கைஸிய்யில் ஷாபியிய்யி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.
2. அல்–ஹாபிழ் அல்–இராகிய்யி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

3. முல்லா அலீ காரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

4. அல் ஹாபிழ் இப்னு கதீர் ரஹ்ததுல்லாஹி அலைஹி அவர்கள்.

5. அல்–ஹாபிழ் அஸ்ஸகாஇய்யி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.
போன்றோர்கள்.

அருமை நபியின் மூலம் இன்னும் அகிலத்திற்கு நன்மையே!

எமது உயிரிலும் மேலான உத்தம நபி ﷺ அவர்கள் எம்மை விட்டும் மறைந்தாலும் எமக்கு அவர்களின் உதவி இல்லாமல் இல்லை. ஏனெனில்,

وما ارسلناك إلاّ رحمة للعالمين

“நாயகமே! உங்களை நாம் உலகத்தாருக்கு ரஹ்மத்தாக அனுப்பி வைத்தோம்”.

இங்கு ரஹ்மத் எனும் வார்த்தையானது மூலச் சொல்லாகும். அது எக்காலத்தைக் கொண்டும் சொந்தம் பெற்றதல்ல. எனவே, அப்படியான மூலச் சொற்களை பெயர்ச் சொற்களாகவும் பாவிக்கலாம். இதன்படி நாயகமே! நாம் உங்களை அகிலத்திற்கு அருட்கொடை புரிபவர்களாகவே அனுப்பி வைத்துள்ளோம் என்பதுதான் கருத்தாகும். இன்னும் சொல்வதானால்,

انما انا قاسم والله معطى

"நான் பங்கு வைக்கிறவன். அல்லாஹ் பங்கு வைக்கக் கொடுப்பவன்". இங்கு قاسم என்பது பெயர்ச் சொல்லாகும். அது எக்காலத்திற்கும் சொந்தமான தல்ல. எனவே, நாயகம் எல்லா நிஃமத்துக்களையும் அன்றும் பங்கு வைத்தார்கள். இன்றும் பங்கு வைக்கி றார்கள். மேலும் பங்கு வைப்பவர்கள் இது மட்டுமல்லா.

إنا ارسلناك شاهدا

"நாயகமே! நாம் உங்களை சாட்சியம் சொல்லக் கூடியவர்களாக அனுப்பி வைத்துள்ளோம்." இங்கு شاهدا சாட்சியம் சொல்லக்கூடியவர்களாக, என்ற வார்த்தையானது பெயர்ச் சொல்லாகும். எனவே, ஏந்தல் நபியவர்கள் எக்காலமும் சாட்சியம் சொல்லக் கூடியவர்களே! அப்படியானால் ஒரு கருமத்திற்கு சாட்சியம் சொல்வதாக இருந்தால், இங்கு حاضر ناظر சமூகம் கொடுத்திருத்தல் பார்த்திருத்தல் என்ற இரு நிபந்தனைகளும் அவசியம் அதன் பின்னர்தான் சாட்சியம். இதில் ஒன்று, இல்லாமல் போகும் பட்சத்தில் அவர் சாட்சியம் சொல்வதற்குத் தகுதியற்றவர். எனவே, எமது நாயகமவர்கள் பார்ப்பவர்களாகவும், கேட்பவர்களாகவும், சமூகம் கொடுப்பவர்களாகவும் எப்போதும் இருந்து கொண்டே இருக்கின்றார்கள் என்பது புரிகிறதல்லவா!

நாயகம் கேட்கமாட்டார்கள், பார்க்கமாட்டார்கள், எதையும் அறியமாட் டார்கள், எங்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிய மாட்டார்கள் என வாதிடுவது அறியாமையும் மடமையுமாகும். இப்படிச்சொல்கிறவன் அண்ணல் நபியின் அந்தஸ்தை குறைக்க முற்படுகிறான். ஒழுக்கக் கேடாக நடந்து கொள்கிறான். ஏனெனில், மையித்தானது முஃமினாக இருந்தாலும் காபிராக இருந்தாலும் அதற்கு கேட்கவும், உணரவும், அறியவும் சக்தியுண்டு என பலதரப்பட்ட ஆதாரங்கள் வந்திருக்கின்றன.

இப்படியான சக்தி பொதுவாக எல்லோருக்கும் உண்டென்றால், முஃமின்களைப் பற்றி சந்தேகப்பட முடியுமா? இல்லை முஃமின்களில் உள்ள சாலிஹான அடியார்களின் விடயத்தில் சந்தேகப்பட முடியுமா? இல்லை முன்னோர் பின்னோருக்கெல்லாம் தலைவராக விளங்கக் கூடிய எங்களுடைய நாயகம் ﷺ அவர்கள் விடயத்தில் சந்தேகப்பட முடியுமா?

கப்ருடைய வாழ்க்கையில் நபிமார்களுக்கு தனியான சில தகுதிகள் இருக்கின்றன. அவர்களின் வாழ்க்கை பரிபூரணமானதும் வலுப்பமானதும் ஆகும். இவ்வுலகில் வாழும் மனிதர்கள் மத்தியில் பல்வேறுபட்ட அந்தஸ்துக்கள் இருப்பதை நாம் காணுகிறோம். அவர்களில் சிலர் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாலும் மரணித்தவர்களைப் போன்றே இருக்கின்றார்கள். "அவர்கள் தான் உள்ளம் இருந்தும் உணராதவர்கள், கண்கள் இருந்தும் பார்க்காதவர்கள், காதுகள் இருந்தும் கேட்காதவர்கள். அவர்களோ, ஆடு, மாடுகளைப் போன்றவர்கள். இல்லை, அவர்கள் அவைகளை விடவும் மோசமானவர்கள். அவர்கள் மருண்டு கெட்டவர்கள்" என இவர்களைப்பற்றி அருள்மறையாம் திருறையில் கோடிட்டுக் காட்டுகின்றான். "இன்னும் அம்மனிதர்களில் சிலருக்கு எத்தகைய பயமோ, அச்சமோ இல்லை. அவர்களைப்பற்றித்தான் அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ்வின் அன்பைப் பெற்ற நேசர்களுக்கு எவ்விதப்பயமோ, துக்கமோ கிடையாது. இன்னும் அம்மனிதர்களில் சிலர் அவர்களைப்பற்றி நிச்சயமாக முஃமின்கள் ஜெயம் பெற்று விட்டார்கள் எனக்கூறி அவர்கள் சுவர்க்கத்தின் அநந்தரக்காரர்கள்" என அல்லாஹ் கூறுகின்றான். "பின்னரும் அம்மனிதர்களில் சிலர் இருக்கின்றார்கள் நிச்சயமாக இதற்கு முன் நல்லவர்களாக இருந்தார்கள். இரவில் சிறிது நேரம்தான் நித்திரை செய்வார்கள். ஸஹர் வேளைகளில் அல்லாஹ்விடம் பிழை பொறுக்கத் தேடுவார்கள்."

இது உலக வாழ்க்கையில் மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வுகள் உண்டு. இவ்வாறே கப்ருடைய வாழ்க்கையிலும் அந்தஸ்துக்களில் ஏற்றத்தாழ்வுகள் உண்டு. அல்லாஹ் இவ்வுலகில் யார் குருடனாக இருந்தானோ, மறுமையிலும் அவன் குருடனாகவே இருப்பான். மேலும், அவன் பாதையால் மிகவும் வழி தவறியவன் எனக்கூறியுள்ளான்.

ஆனால், நபிமார்கள் அவர்களின் வாழ்க்கை இரணம், அறிவு, கேள்வி, உணர்வு அத்தனையும் ஏனையோர்களை விடவும் அங்க சம்பூர்ணம் வாய்ந்ததாக இருக்கும். இதற்கு ஆதாரமாக......

ولا تحسبن الذين قتلوا في سبيل الله أمواتا بل أحياء عند ربهم يرزقون

"அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை நீங்கள் மரணித்தவர்கள் என நினைக்க வேண்டாம். எனினும் தங்களுடைய இறைவனிடம் உயிரோடு

இருக்கின்றார்கள்" என்பதாம்.

இங்கு வாழ்க்கை உயிரின் தரிபாடுதானே தவிர வேறொன்றில்லை. எக் காலமும் உயிர் அழியவே மாட்டாது. இதைக்குறித்துத்தான் ஓர் **ஆரிபு பில்லாஹ்:**

يا خادم الجسم كم تشقى بخدمته أتطلب الربح مما فيه خسران
فاقبل إلى النفس فاستكمل فضائلها فأنت بالروح لا بالجسم إنسان

"தனது ஜடலத்திற்கு ஊழியம் செய்து அதனை சுகமாக வைத்திருக்க வேண்டும் என நாடுகின்ற மனிதனே! நீ அதற்கு எதுவரையும் ஊழியம் செய்யப் போகின்றாய். எதிலே நஷ்டம் இருக்கின்றதோ அதில் நீ இலாபத்தை தேடுகின்றாயா? எனவே, நீ ஆத்மாவின் பக்கம் திரும்பிப்பார். அதன் வரிசைகளை அங்க நிறைவுபடுத்து. நீ "ரூஹு" எனும் ஆத்மாவைக் கொண்டு மனிதனே தவிர உனது ஜடலத்தைக் கொண்டு மனிதன் அல்ல" எனப்பாடியுள்ளார்கள்.

எனவே, நாயகம் பார்க்கிறார்கள், கேட்கிறார்கள், உணருகிறார்கள் என்பதெல் லாம் ரூஹை வைத்துத்தானே அன்றி ஜடலத்தை வைத்து அல்ல. அவ்வாறு இல்லையெனில் மனிதா! நீ தொழுகையில் அத்தஹிய்யாத்தில்
السلام عليك أيها النبي நபியே! உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக! எனக் கூறுவதும் தவறல்லவா? ஏன் يا – أيها – أيا எழுத்துக்களெல்லாம் தூரத்திலிருக்கும் ஒருவரை அழைப்பதற்குப் புழங்கப்படும் எழுத்துக்களாகும். அதிலும் أيها என்பது நிதா: குர்பி முன்னிலையில் உள்ளவரை அழைப் பதற்குப் பாவிக்கப்படக்கூடியதாகும். எனவே, நீ தொழும் பொழுது உனது முன்னிலையில் நபியவர்கள் இருக்கின்றார்கள். அதனாலே தான்
السلام عليك أيها النبي என நீ சொல்கின்றாய். இதனால் அல்லாஹ் குர்ஆனில்:

واعلموا أن فيكم رسول الله

"அறிந்து கொள்ளுங்கள்! அண்ணல் உங்களுக்கு மத்தியிலிருக்கின்றார்கள். ஆம், அவர்களின் புனித மேனி அன்று வைக்கப்பட்டது போன்று இன்றும் இருக் கின்றது. ஆனாலும் அவர்களின் ஜடலத்துடன் ஆத்மாவுக்கு தொடர்பு இருப்ப

துடன் அவ்வாத்மா அகிலத்தில் சஞ்சாரம் செய்கிறது. அதற்கு எத்திரையும் கிடையாது.” எனவேதான்,

حيثما كنتم فصلوا عليّ فان صلاتكم تبلغني

“எங்கிருந்தாலும் என்மீது ஸலவாத்துச் சொல்லுங்கள். ஏனெனில், நீங்கள் சொல்கின்ற ஸலவாத்து எனக்கு எத்துகிறது.” என நாயகம் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். இதற்கு விளக்கம் எழுதும் **அல்லாமா மனாவீ ரஹ்மதுல் லாஹி** அவர்கள்:

لأن النفوس القدسية إذا تجردت عن العلائق البدنية عرجت واتصلت بالملأ الأ

على و لم يبق لها حجاب فترى الكل بالمشاهدة بنفسها وباخبار الملك بها

ஏனெனில், நிச்சயமாக பரிசுத்த ஆத்மாக்கள் உடலத்தின் தொடர்புகளை விட்டும் நீங்கி உயர்ந்து உயர்த்தியான கூட்டத்தில் சேர்த்து விட்டால் அதற்கு திரையில்லாமல் போய்விடும். எனவே, அவ்வாத்மா எல்லாவற்றையும் தானாகவே பார்த்துக் கொள்ளும், மேலும், மலக்குகளின் அறிவிப்பைக் கொண்டு அறியவும் செய்யும் எனக் கூறியுள்ளார்கள்.

ஆதாரம்: பைழுழ் கதீர் ~ பக்கம்: 499 ~ பாகம்: 3

மேலும், **நாயகம்** ﷺ அவர்கள்:

حياتي خيرلكم تحدثون ويحدث لكم فاذاأنامت كانت وفاتي خيرالكم تعرض علي

أعمالكم فان رأيت خيرا حمدت الله وإن رأيت شرا استغفرت لكم

“நான் உயிர் வாழ்வது உங்களுக்கு சிறந்ததாகும். நான் சொல்வது உங்களுக் குச் சொல்லப்படும் அவைகளை நீங்கள் செய்வீர்கள்”. (இன்னுமொரு ரிவாயத் தில் حياتي خيرلكم ومماتي خيرلكم ‘நான் இவ்வுலகில் உயிர்வாழ்வதும் உங்களுக்குச் சிறந்தது.” அதாவது நான் உயிர்வாழ்வது பித்னாக்களிலி ருந்தும், பித்அத்துக்களிலிருந்தும் கருத்து வேற்றுமைகளிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் உங்களைப்பாதுகாக்க கடமைப்பட்டது. நான் மரணித்து விடுவதும் உங்களுக்குச் சிறந்ததாக இருக்கும்) அதாவது, நான் மரணித்து விட்டால் உங்களின் அமல்கள் எனக்குக் காண்பிக்கப்படும். எனவே, நான் நீங்கள் செய்த நல்ல காரியங்களைக் கண்டால் அல்லாஹ்

வைப் புகழ்வேன். மேலும் தீயகாரியங்களைக் கண்டால் உங்களுக்காக அல்லாஹ்விடம் பிழைபொறுக்கத் தேடுவேன் எனக் கூறியுள்ளார்கள்.

ஆதாரம்: *ஜாமிவுஸ்ஸகீர்: 479, பாகம்: 3*

இங்கு நபியவர்கள் இவ்வுலகத்திலும் உதவி செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். கப்ருடைய வாழ்க்கையில் இருக்கின்ற காலத்திலும் உதவி செய்யக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். அப்படியானால் மறுமையிலும் மாநபியவர்கள்தான் எங்களுக்கு உதவியாளர் என்பது விளங்குகின்றது. நாயகம் ﷺ அவர்கள் இவ்வுலகை விட்டும் மறைந்ததன் பின்னர் அவர்களின் மூலம் எவ்வித பிரயோசனமும் இல்லை. அவர்கள் ஏனைய சாதாரன மனிதர்களைப் போன்று தான் என எவன் உறுதி கொள்கின்றானோ, அவன் வழி கெட்டவன், பிறரையும் வழிகெடுப்பவன் என அல்லாமா அஹ்மத் ஸாவி றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆதாரம்: *தப்ஸீர் ஸாவி, பாகம்: 1, பக்கம்: 171.*

எனவே, அல்லாஹ்விற்கும் அடியானுக்கும் எந்த அடிப்படையில் வித்தியாசம் உண்டு என்பதையும், ஆத்மாவின் தன்மை எப்படி இருக்கிறது என்பதனை அறிந்த காரணத்தினாலும் நபியவர்கள் நம்மை விட்டும் பிரிந்த பின்னாலும் அவர்களை விழித்தழைத்து உதவி தேடியிருக்கும் வரலாறுகளை ஸஹாபாக்கள், தாபியீன்கள், இமாம்கள், ஒலிமார்கள் போன்றவர்களின் வரலாறுகளில் காணுகின்றோம். இதோ! **இமாமுல் அஃழம் அபூ ஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்:**

ياسيد السادات جئتك قاصداً ارجو رضاك واحتمي بحماك
والله يا خير الخلائق إن لي قلبا مشوقا لا يروم سواك
يامالكي كن شافعي في فاقتي إني فقير في الورى لغناك
ياأكرم الثقلين ياكنز الورى جدلي بجودك وارضني برضاك
أنا طامع بالجود منك ولم يكن لأبي حنيفة في الأنام سواك

"தலைவர்களுக்கெல்லாம் தலைவரான நாயகமே! நான் உங்களின் பொருத்தத்தை நாடியும். உங்களின் பாதுகாப்பைக்கைக் கொண்டு பாதுகாப்புத் தேடியும்

உங்களிடம் வந்துள்ளேன்".

"அல்லாஹ் மீது ஆணையாக! நிச்சயமாக உங்களையன்றி வேறுயாரையுமே நாடாத உங்கள் மீது மிகுந்த அன்பு வைத்திருக்கும் உள்ளம் எனக்குண்டு".

"எனது எஜமானே எனது வறுமைக்கு நீங்கள் சிபாரிசு செய்பவர்களாக இருந்து கொள்ளுங்கள். நிச்சயமாக நான் உலகமக்களிலெல்லாம் உங்களின் சீமான் தனத்தளவில் தேவையுடையவனாக உள்ளேன்".

"மனித, ஜின்வர்க்கங்களிலெல்லாம் மிக சங்கை வாய்ந்த நாயகமே! மனிதர்களில் பொக்கிஷமே! உங்களின் கொடையைக் கொண்டு எனக்கு கொடை கொடுங்கள். உங்களின் பொருத்தத்தைக் கொண்டு என்னை பொருந்திக் கொள்ளுங்கள்!".

"நான் உங்களிடம் இருக்கும் கொடையிலே ஆசை வைத்தவன். இவ்வுலக மக்களில் இந்த அபூ ஹனீபாவுக்கு உங்களைத்தவிர வேறு கெதி இல்லை".
எனப்பபாடியுள்ளார்கள். ஆகவே, இதிலிருந்து يارفاعى – ياشاذلى يامحي الدين – يارسول الله என்றெல்லாம் அழைக்கலாம் என்பது தெளிவாகிறது. எனவே, இப்படி அழைப்போர்களையெல்லாம் பார்த்து இப்படி அழைப்பதெல்லாம் ஷிர்க், குப்ர் என்று சொல்பவர்கள் ஜாக்கிரதையாக இருந்து கொள்ளக்கடமைப்பட்டுள்ளார்கள்.

ஏந்தல் நபியுல்லாஹ் எம்போன்ற சாதாரண மனிதர் அல்ல!

ஏந்தல் நபி எம் போன்றவர்கள் அல்ல என்பதற்கு அதிக ஆதாரங்கள் உண்டு. எனினும் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

خص نبينا بعشرة خصال — لم يحتلم قط وماله ظلال

والأرض ما يخرج منه تبتلع — كذالك الذباب عنه ممتنع

تنام عيناه وقلب لاينام — من خلفه يرى كما يرى أمام

لم يتثاءب وهى السابعة — ولد مختونا إليها تابعة

تعرفه الداوب حين يركب　　تأتى إليه سرعة لا تهرب
تعلو جلوسه جلوس الجلسا　　صلى عليه الله صبحا ومسا

எங்களுடைய நாயகம் ﷺ அவர்கள் பத்து விடயங்களைக் கொண்டு சொந்தப்படுத்தப்பட்டுள்ளார்கள். அப்படியானால் இப்பத்து விடயங்கள் மட்டும் தான் பொது மக்களைவிட்டும் வேறு பிரிக்கிறது என நினைக் கூடாது. இன்னும் எத்தனையோ விஷேட தன்மைகள் உண்டு. இக்கவிதை யில் பத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் பத்து என்று கூறியுள்ளோம்.

1. அவர்களுக்கு அறவே ஸ்கலிதம் ஏற்படவில்லை.

عن ابن عباس رضى الله عنه قال: مااحتلم نبى قط وإنما الإحتلام من الشيطان

"எந்த நபிமார்களுக்கும் அறவே ஸ்கலிதம் ஏற்படவில்லை. ஏனெனில் ஸ்கலிதம் ஷெய்தானுடைய சேஷ்டையினால் ஏற்படக்கூடியதாகும்" என இப்னு அப்பாஸ் ؓ அறிவித்துள்ளார்கள்.

ஆதாரம்: *அல்-கஸாயிஸுல்குப்ரா பக்கம்: 120, பாகம்: 1*

2. அவர்களுக்கு நிழலுமில்லை.

عن ذكوان رضى الله عنه أن رسوالله صلى الله عليه وسلم
لم يكن يرى له ظل فى شمس ولاقمر

"நாயகம் ﷺ அவர்களுக்கு சூரிய ஒளியிலும் நிழலில்லை. சந்திர ஒளியிலும் நிழலில்லை" என்பதாக தக்வான் ؓ அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

மேலும், "நிச்சயமாக நாயகம் ﷺ அவர்களின் நிழல் நிலத்தில் விழுவதில்லை. ஏனெனில் அவர்கள் ஒளியாக இருந்தார்கள். எனவே, அவர்கள் சூரிய ஒளியில் நடந்தாலும் அல்லது சந்திர ஒளியில் நடந்தாலும் அவர்களின் நிழலை காணமுடியாது. இது அவர்களின் விஷேட தன்மைகளில் ஒன்றாகும்" என இப்னு ஸபஃ ؓ அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஆதாரம்: *கஸாயிஸுல்குப்ரா: பக்கம் 116, பாகம்: 1*

இதுபற்றி அல்லாமா அபூபக்ரினில் பஃதாதி குத்திஸஸிர்ருஹூ அவர்கள்:

لاشراقه لم تشخص الشمس ظله ومن عجب شخص ولايشخص الظلا

"நாயகத்தினுடைய பிரகாசத்தினால் சூரியன் நாயகத்தின் நிழலைப் புவியில் தோற்றுவிக்கவில்லை. ஆனால் ஒருரூபம் அது நிழலை தோற்றாதிருப்பது பெரும் ஆச்சரியத்தில் நின்றுமுள்ளது" எனப்பாடியுள்ளார்கள்.

இதுபற்றிய மேலதிக விளக்கத்தை *ஷெய்கு நாயகம் :ஃபலீழத்துஷ் செய்க் அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி தவ்வலல்லாஹு ஹயாதஹு* அவர்களினால் எழுதப்பட்ட (مطالع الجود فى تفسير آية النور) **"தப்ஸீர் ஆயத் அந்நூர்"** என்ற நூலைப் படித்துத் தெளிவு பெறவும்.

3. அவர்களிலிருந்து வெளியாகும் மலத்தை பூமி விழுங்கிவிடும்

عن عائشة رضي الله عنها قالت كان النبي صلى الله عليه وسلم إذا دخل الغائط دخلت فى إثره فلا أرى شيأ إلا كنت أشم رائحة الطيب فذكرت ذلك له فقال أما علمت أن أجسادنا تنبت على أرواح أهل الجنة فما خرج منها من شيئ ابتلعته الأرض

"நாயகம் ﷺ அவர்கள் மலம் கழித்துவிட்டு திரும்பியவுடன் உடனே அங்கு சென்று பார்ப்பேன். அங்கு ஒன்றையும் நான் காணுவதில்லை. மணமான வாடையைத் தவிர. இதுபற்றி அவர்களிடம் நான் கூறியபோது, ஆயிஷாவே! உனக்குத் தெரியாதா! நிச்சயமாக எங்களுடைய மேனிகளானது, சுவர்க்கலோக ரூஹுகளுடன் வளர்கின்றவைகள். எனவே, அதிலிருந்து எது வெளியாகின்றதோ அவைகளை நிலம் விழுங்கிக் கொள்ளும்" எனக் கூறினார்கள் என ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஆதாரம்: *கஸாயிஸுல்குப்ரா, பக்கம்: 120, பாகம்: 1*

இன்னும் இதுபோன்ற பல ஹதீதுகள் உண்டு. விரிவஞ்சி விடுத்தோம்.

4. அவர்களின் மேனியில் ஈ மொய்ப்பதில்லை

أن النبي صلى الله عليه وسلم كان لا يترل عليه الذباب

"நாயகம் ﷺ அவர்கள் மீது ஈ மொய்ப்பதில்லை"

أنه لم يقع على ثيابه ذباب قط

"உடம்பில் மட்டுமல்ல, அவர்களின் உடையிலும் அறவே ஈ மொய்ப்பதில்லை".

ஆதாரம்: *அல்கஸாயிஸுல்குப்ரா, பக்கம்: 117, பாகம்: 1*

இது குறித்தே இமாம் ஸதகதுல்லாஹில் காஹிரி குத்திஸஸிர்குஹு அவர்கள்:

بعوض وبق لم يكونا ليذللا الأ لاء وجه منك وهو مذهب

"நாயகமே! தங்களின் முகம் தங்கத்தினால் அழுத்தப்பட்டதாக இருக்கும் நிலையில் அந்த முகத்தின் பிரகாசத்தினால் கொசுக்களும் ஈக்களும் அதில் ஒட்டி முகத்தை அலங்கோலமாக்குவதில்லை" எனப்பாடியுள்ளார்கள்.

5. அவர்களின் இரு கண்களும் தூங்கும். ஆனால், உள்ளம் தூங்காது:-

عن عائشة رضي الله عنها قالت: قلت يا رسول الله أتنام قبل أن توتر؟ فقال: يا عائشة إن عيني تنامان ولا ينام قلبي

'ஒரு நாள் நாயகம் ﷺ அவர்கள் வித்ரு தொழுவதற்கு முன் தூங்க ஆயத்தமானார்கள். நாயகமே! வித்ரு தொழ முன் தூங்கப்போகிறீர்களா! எனக் கேட்டேன். அப்போது, நிச்சயமா எனது இரு கண்களும்தான் தூங்கும். உள்ளம் உறங்கமாட்டாது என நபியவர்கள் கூறினார்கள்" என ஆயிஷா ஸித்தீக்கா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஆதாரம்: *புகாரி, முஸ்லிம்,*

அல்கஸாயிஸுல்குப்ரா: பக்கம்: 118, பாகம்: 1

أن النبي صلى الله عليه وسلم كان تنام عيناه ولا ينام قلبه

"நாயகமவர்களின் இரு கண்களும்தான் தூங்கும். உள்ளம் தூங்காது" என ஜாபிர் ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஆதாரம்: *அல்கஸாயிஸுல்குப்ரா, பக்கம்: 119, பாகம்: 1*

ஏனெனில், நபிமார்களுக்கு தூக்கத்திலும் அறிவுப்புக்கள் வரலாம். இத னால்தான்

رءوية الأنبياء وحى

"நபிமார்களின் கனவு வஹியாகும். அதை மார்க்கமாக்கலாம்" என்ற கருத்தை நாயகம வர்கள் கூறினார்கள். எனவேதான் **இமாம் பூஸரி ரஹ்மதுல்லாஹி அலை ஹி அவர்கள்:**

لا تنكر الوحى من رؤياه إن له قلبا إذا نامت العينان لم ينم

"நபிகளாருக்கு கனவின் மூலம் அருளப்படும் வஹி (இறை செய்தி)யை நீ நிராக ரித்துவிடாதே. கண்கள் உறங்கினாலும் உறங்காத இருதயம் நிச்சயமாக அவர்க ளுக்கு உண்டு" எனப்பாடியுள்ளார்கள். மற்றும் **ஸதகதுல்லாஹில் காஹிரி குத்திஸ ஸிர்ருஹு அவர்கள்** இதற்கு தஃமீஸ் எழுதும் பொழுது:

ياصاحبى فاعتقد فيه بأن له   وحيا من الله من جبريل عن له

يا ممترى تب إلى المولى وإن له   لا تنكر الوحى من رؤياه إن له

قلبا إذا نامت العينان لم ينم

"எனது நண்பனே! அல்லாஹ்விடத்திலிருந்து ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் மூலம் (வஹி) இறை அறிவிப்பு அண்ணலாரிலே இருக்கின்றதென்று நீ உறுதி கொள்"

"அதில் சந்தேகம் கொள்பவனே! நீ உனது எஜமானாகிய இறைவனிடம் அதில் சந்தேகம் வைத்ததற்காகப் பிழை பொறுக்கத் தேடு. மேலும் அது அவர்களுக்கு உண்டு என்று உறுதி கொள்". எனப்பாடியுள்ளார்கள்.

6. அவர்கள் முன்னால் உள்ளவற்றைப் பார்ப்பது போன்று பின்னால் உள்ளவற்றை பார்ப்பவர்கள்

அல்லாஹ் அல்-குர்ஆனில்:

مازاغ البصر وماطغى   سورة النجم ١٨

"பார்வை சறுகிவிடவுமில்லை. கடந்துவிடடுவுமில்லை."

عن عائشة رضى الله عنها قالت: كان رسول الله عليه وسلم

يرى فى الظلماء كما يرى فى الضوء

"நாயகம் ﷺ அவர்கள் வெளிச்சத்தில் உள்ளவைகளைப்பார்ப்பது போன்று இருளில் உள்ளவைகளையும் பார்ப்பார்கள்" என ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஆதாரம்: *அல்-கஸாயிஸுல்குப்ரா, பக்கம்: 104, பாகம்: 1*

عن أبي هريرة رضى الله عنه أن رسوالله صلى الله عليه

وسلم قال : هل ترون قبلتي هاهنا فوالله مايخفى علي ركوعكم ولا

سجودكم إنى لأ راكم من وراء ظهرى

"உங்களுக்குத் தொழுகை நடத்தும் நான் முன்னால் மட்டும் பார்த்துக் கொண்டிருக்கின்றேன் என நினைத்துக் கொண்டிருக்கின்றீர்களா? அப்படி நினைக்காதீர்கள். ஏனெனில், அல்லாஹ் மீது ஆணையாக நான் உங்களுக்கு முன் நின்றாலும் உங்களின் ருகூஃ, சுஜூது எனக்கு மறைவதில்லை. நிச்சயமாக நான் எனது பின்புறத்தினாலும் உங்களைப் பார்க்கிறேன்" என நாயகம் கூறினார்கள்.

அறிவிப்பவர்: *அபூ ஹுரைரா (ரழி) அவர்கள்.*
ஆதாரம்: *புகாரி, முஸ்லிம்*
அல்கஸாயிஸுல்குப்ரா: பக்கம்: 104, பாகம்: 1

عن أنس رضى الله عنه أن رسول الله صلى الله عليه وسلم قال ياأيهاالناس إنى

امامكم فلا تسبقونى بالركوع ولا با لسجود فإنى أراكم من أمامى ومن خلفى

"நாயகம் ﷺ அவர்கள் ஒரு விடுத்தம் தோழர்களைப் பார்த்து மனிதர்களே நான் உங்களுக்கு முன் நின்று தொழுவிக்கும் இமாமாக இருக்கும், எனினும் நான் உங்களுக்கு முன்தான் நிற்கிறேன் என்று நினைத்து ருகூவைக் கொண்டோ, ஸுஜூதைக் கொண்டோ என்னை முந்தாதீர்கள். ஏனெனில், எனக்கு முன்னாலும்

உங்களைப்பார்க்கிறேன். பின்னாலும் பார்க்கிறேன்." எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர்: *அனஸ் ﷺ அவர்கள்.*
ஆதாரம்: *முஸ்லிம் ஷரீப்,*
அல்கஸாயிஸூல்குப்ரா: பக்கம்: 104, பாகம்: 1

இதைக்குறித்தே **இமாம் ஸதகதுல்லாஹில் காஹிரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்:**

يرى بالقفا فعل المصلى بصفه وينهاهم عما أساءوا بكفه

"தொழுபவன் தனது அணியில் இருந்து கொண்டு செய்யும் செயலை நாயகம் ﷺ அவர்கள் தனது பிடரியின் மூலம் கண்டு அவன் தொழுகையில் செய்த தீங்கை விட்டும் அவனைத்தடுப்பார்கள்" எனப் பாடிக்காண்பிக்கிறார்கள்.

7. நாயகம் (ஸல்) அவர்கள் கொட்டாவி விட்டதில்லை

عن يزيد بن الأصم قال: ماتثائب نبى قط

"எந்நபியும் கொட்டாவி விடவில்லை" என யஸீத் இப்னு அல்அசம் அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: *அல்கஸாயிஸூல்குப்ரா, பக்கம்: 112, பாகம்: 1*

இது பற்றியும் இமாம் ஸதகதுல்லாஹில் காஹிரி ரஹ்மதுல்லாஹி அவர்கள்:

بلا لم يفه أصلا لفقر تسخطا ولم يتجشا أو يثاءب ويمخط

"நம் நபியவர்கள் முடுமையைக் கோபித்ததற்காக இல்லை என்ற வார்த்தையைப் பாவிக்கவில்லை. இன்னும் அவர்கள் ஒருநாளேனும் ஏப்பம்விடவில்லை" எனப்பாடியுள்ளார்கள்.

8. நாயகம் ﷺ கத்னா எவம் விருத்தசேசனம் செய்யப்பட்டவர்களாகவே பிறந்தார்கள்.

عن أنس رضى الله عنه عن النبى صلى الله عليه وسلم قال:

من كرامتي على ربي اني ولدت مختونا و لم يرأحد سوءتي

"எனது ரப்பு எனக்குக் கொடுத்த கண்ணியம். நான் விருத்தாசேசனம் செய்யப்பட்டவனாகவே பிறந்தேன். எனது மர்மஸ்தானத்தை யாருமே பார்க்கவில்லை" என நபியவர்கள் கூறினார்கள் என அனஸ் ﷺ அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: *அல்கஸாயிஸூல்குப்ரா, பக்கம்: 90, பாகம்: I*

عن أبي هريرة رضى الله عنه ان النبى صلى الله عليه وسلم ولد مختونا

"நிச்சயமாக நபியவர்கள் கத்னா செய்யப்பட்டவர்களாகவே பிறந்துள்ளார்கள்" என அபூஹூரைரா ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஆதாரம்: *அல்கஸாயிஸூல்குப்ரா, பக்கம்: 90, பாகம்: I*

عن ابن عمر رضى الله عنه قال: ولد النبى صلى الله عليه وسلم مسرورا مختونا

"நாயகம் ﷺ அவர்கள் தொப்புள் கொடி அறுக்கப்பட்டவர்களாகவும், கத்னாச் செய்யப்பட்டவர்களாகவுமே பிறந்தார்கள்" என இப்னு உமர் ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஆதாரம்: *அல்கஸாயிஸூல்குப்ரா, பக்கம்: 90, பாகம்: I*

இதுகுறித்து அபூபக்கரினில் ப:தாதி ﷺ அன்ஹூ அவர்கள் வித்ரிய்யாவில்:

نعم جاء مختونا ختان إلهه لكيلا يراه حين يختن إنسان

"ஆம் அவர்களுக்கு கத்னாச் செய்யும் போது அவர்களுடைய மர்மஸ்தானத்தை எந்த மனிதனும் காணக்கூடாது என்பதற்காக அவர்களின் நாயனின் கத்னாவைக் கொண்டு கத்னாச் செய்யப்பட்டவர்களாகப் பிறந்தார்கள்" எனப் பாடுகின்றார்கள்.

9. அவர்கள் ஒட்டகம், கோவேரிக்கழுதை போன்ற வாகனங்களில் செல்லுகின்ற போது அவைகள் நாயகத்தை அறிந்து கொள்ளும். அது மட்டுமல்ல, அவர்களிடத்தில் சீக்கிரம் வந்து சேரும், அவர்களைக்கண்டு ஓடாது.

أخرج البيهقى عن جابر بن عبدالله رضى الله عنه أن ناضحا لبعض بنى سلمة اغتلم فصال عليهم وامتنع حتى عطشت نخلة فشكا إلى النبى صلى الله عليه وسلم فذهب رسول الله صلى الله وسلم حتى بلغ باب النخل فقيل يارسول الله صلى الله عليه وسلم لاتذخل فانا نخاف عليك منه فقال رسول الله صلى الله عليه وسلم ادخلوا فلا بأس عليكم فلما رآه الجمل أقبل يمشى واضعا رأسه حتى قام بين يديه فسجد فقال رسول الله صلى الله عليه وسلم ائتوا جملكم فاخطموه

"பனீ ஸல்மா கிளையினரின் ஒருவருக்குச் சொந்தமான பேரீத்த மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஈடுபடுத்தப்படும் ஒட்டகை மூரியாட்டம் பண்ண ஆரம்பித்துவிட்டது. இதனால் பேரீத்தம் மரங்களும் வாட ஆரம்பித்துவிட்டன. இதுபற்றி ஒட்டகைச் சொந்தக்காரர் நபியிடம் முறைப்படவே, நபியவர்கள் பேரீச்சம் தோப்பின் வாயிலை நெருங்கவே அங்கிருந்தோர் அல்லாஹ்வின் தூதரே! நுழைய வேண்டாம். ஏனெனில், அவ்வொட்டகை தாங்களுக்கு ஏதாவது செய்து விடுமென்று நாங்கள் பயப்படுகின்றோம் எனக் கூறினார்கள். இது கேட்ட நபியவர்கள் குற்றமில்லை, நுழையுங்கள் என்று கூறிவிட்டு தோப்புக்குள் நுழைந்தார்கள். ஒட்டகம் நபியவர்களைக் கண்ட பொழுது, தலையைத் தாழ்த்திய வண்ணம் நடந்து வந்து நாயகத்தின் முன் நின்று சிரம் பணிந்தது. அப்போது நாயகமவர்கள் உங்களின் ஒட்டகையிடம் வாருங்கள். மூக்குக்கயிறு போடுங்கள்" எனச் சொன்னார்கள் என ஜாபிர் ﵁ அவர்கள் அறிவித்துள்ளார்கள்:

ஆதாரம்: *அல்கஸாயிஸுல்குப்ரா, பக்கம்: 94, பாகம்: 1*

உத்தமர் ஸதகதுல்லாஹில் காஹிரி அவர்கள்:

نوا ضح بعض الصحب لما أبينهم ... على النضح مس المصطفى فاجتبينهم
طواعية إذا كان للخلق زينهم ... أمان لأهل الأرض مذحل بينهم
به يدفع الله العذاب ويدرأ

"நபித்தோழர்களில் ஒருவரின் தண்ணீர் இறைக்கப்பூட்டப்படும் ஒட்டகம் வெருண்டோடிவிட்டது. நாயகம் அதைத் தொட்டார்கள். நாயகமவர்கள் படைப்

புகளுக்கு அழகாக இருப்பதனால் அந்த ஒட்டகம் வழிப்பட்டு தனது எஜமா னுக்கு அடிபணிந்தது" எனப்பாடுகிறார்கள். இப்பாடலில் கீழ் வரும் சம்பவம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதாவது,

"நாங்கள் நாயகம் ﷺ அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அந்நேரத்தில் ஒருவர் வந்து இன்னாருடைய ஒட்டகம் ஓடிவிட்டது. அதனால் ஈத்தமரங்களுக்கு தண் ணீர் இறைக்க முடியவில்லை எனக்கூறினார். உடனே நாயகம் ﷺ அவர்கள் ஒட்டகம் இருந்த இடத்தை நோக்கி எழுந்து சென்றார்கள். நாங்களும் சென் றோம். நாங்கள் ஒட்டகத்தின் முரியாட்டத்தைப் பார்த்து யா ரசூலல்லாஹ்! நீங்கள் அதற்குப்பக்கத்தில் போக வேண்டாம். அது உங்களுக்கு ஏதாவது செய்து விடுமென்று நாங்கள் பயப்படுகின்றோம் எனக் கூறினோம். எனினும் நபிய வர்கள் ஒட்டகத்தை நெருங்கினார்கள். நபியைக்கண்ட ஒட்டகம் வெருண்டோ டாது அவர்களுக்கு சிரம் பணிந்தது. பின்னர் நபியவர்கள் ஒட்டகத்தின் தலையில் தன் முபாரக்கான கையை வைத்துக் கொண்டு கயிற்றைக் கொண்டு வரும்படி சொன்னார்கள். பின்னர் ஒட்டகச் சொந்தக்காரரை அழைக்கும் படி கூறினார்கள். சொந்தக்காரர் அழைக்கப்பட்டார். அவரைப்பார்த்து நபியவர்கள், இதற்கு நன் றாகத் தீண் கொடுக்க வேண்டும். கடினமான வேலை கொடுக்கக்கூடாது எனக் கூறினார்கள்" என அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்பா ﵁ அவர்கள் அறி விக்கின்றார்கள்.

ஆதாரம்: அல்கஸாயிஸுல்குப்ரா, பக்கம்: 94, பாகம்: 1

இதுபோன்ற பல சம்பவங்கள் உண்டு விரிவுரை அஞ்சி தவிர்க்கின்றோம்.

10. நாயகத்தின் இருப்பு அவர்களுடன் இருப்பவர்களின் இருப்பை விட உயர்ந்துவிடும்.

அதாவது, நபியவர்கள் மிகவும் கட்டையானவர்களும் உயர்ந்தவர்களு மல்ல, நடுத்தரமானவர்கள். எனினும் மக்களுக்கு மத்தியில் இருக்கும் போது, அவர்களே உயர்ந்தவர்களாக காட்சி தருவார்கள் என்பதாகும்.

அல்லாஹ் நபியவர்கள் மீது காலையிலும் மாலையிலும் ஸலவாத்துச் சொல்வானாக!

عن عائشة رضي الله عنها قالت: لم يكن رسول الله صلى الله عليه وسلم بالطويل البائن ولا بالقصير المتردد وكان ينسب إلى الربعة اذا مشى وحده ولم يكن على حال يماشيه أحد من الناس ينسب إلى الطويل إلا طاله رسول الله صلى الله عليه وسلم ولربما اكتنفه الرجلان الطويلان فيطولهما فإذا فارقاه نسب رسول الله صلى الله عليه وسلم إلى الربعة

"நாயகம் ﷺ அவர்கள் மிக உயர்ந்தவர்களாகவோ, மிகக்கட்டையாகவோ இருக்கவில்லை. அவர்கள் தனிமையாக நடப்பார்களேயானால் நடுத்தர உயர முடையவர்களாகவே இருப்பார்கள். உயர்ந்தவர்களோடு நடந்தால் நாயகம் அவர்களைவிட உயர்ந்துவிடுவார்கள். சில நேரங்களில் உயர்ந்த இருவரின் தோழில் கையை வைத்து நடப்பார்கள். அப்போது அவ்விருவரும் பிரிந்தவுடன் நடுத்தர உயரத்திற்கு வந்துவிடுவார்கள். மேலும் ஒரு சபையில் உட்கார்ந்திருப் பார்களேயானால் அங்கு உட்கார்ந்திருப்போரின் தோள் புயங்களைவிட நபியவர் களின் தோழ் உயர்ந்ததாகவே காட்சியளிக்கும்" என ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ஆதாரம்: *அல்கஸாயிஸுல்குப்ரா, பக்கம்: 116, பாகம்: 1*

எனவே, ஏந்தல் நபியவர்கள் எம்போன்ற மனிதாரகப் பார்வையில் தோன்றி னாலும் அவர்களின் இரகசியம் அந்தரங்கமானது. எவராலும் அறிய முடி யாது. அவர்களுக்குக் கொடுத்த விஷேட தன்மைகள் வேறு எந்த நபிமார்க ளுக்கும் கொடுக்கப்படவில்லை. இதனால் தான் நபிமார்களும் கூட இந்த உம்மத்தில் இருக்க வேண்டும் என ஆசைப்பட்ட வரலாறுகளையும் நாம் காணுகிறோம். இது குறித்தும் கூட **இமாம் ஸதகதுல்லாஹில் காஹிரி றஹ்மதுல்லாஹி அவர்கள்:**

به كم وجدنا من فضائل جمة — وقد زال عنا كل هم وغمة

ونلنا به دينا أهم مهمة — بعزته سدنا على كل أمة

وملتنا فيها النبيون ترغب

"நாயகம் ﷺ அவர்கள் மூலம் நாம் அதிகமான வரிசைகளை அடைந்து கொண்

டோம். இன்னும் அவர்களின் மூலம் அனைத்து கவலைகளும், இன்னல்களும், இடர்களும், இடுக்கண்களும் எங்களை விட்டு நீங்கிவிட்டது. மேலும், முக்கிய மான விடயங்களில் மிக முக்கியமான மார்க்கத்தை நாம் அவர்களின் மூலம் அடைந்து கொண்டோம். இன்னும் அவர்களின் கண்ணியத்தின் மூலமே எல்லா உம்மத்துக்களைவிடவும் உயர்ந்தோம். எங்களுடைய மார்க்கமானது, அதில் நாம் இருக்க வேண்டும் என்று ஏனைய நபிமார்களும் ஆசை வைத்த மார்க்கமாக இருக்கும்" எனப்பாடியுள்ளார்கள்.

பனீ இஸ்ராயீல்களின் நபியாகிய மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ் அறிவித்தான், யார் அஹ்மது ﷺ அவர்கள் நபி என்பதை மறுத் தவனாக என்னைச் சந்திக்கின்றானோ, அவனை நான் நரகத்தில் நுழைத்து விடுவேன் என்பதாக! இது கேட்ட மூஸா நபியவர்கள், யார் அந்த அஹ்மத்? எனக் கேட்டார்கள். அப்போது அல்லாஹ் அவரை விடவும் சங்கை வாய்ந்த படைப்பை நான் படைக்கவில்லை. அவருடைய பெயரை நான் வானங்க ளையும் பூமிகளையும் படைப்பதற்கு முன்னதாகவே எனது அருளில் எனது பெயருடன் சேர்த்து எழுதிவிட்டேன். நிச்சயமாக அவர்களும், அவர்களுடைய உம்மத்தினர்களும் சுவர்க்கத்தில் நுழைகின்ற வரைக்கும் மற்றவர்களான எனது படைப்புகளுக்கு சுவர்க்கம் நுழைவது ஹராம் எனக்கூறினான். அப்போது, மூஸா நபியவர்கள் அவர்கள், யார் எனக் கேட்டார்கள்? ஏற்றத்தில் ஏறும்போதும், இறக்கத்தில் இறங்கும் போதும் இன்னும் எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வாகிய என்னைப் புகழுவார்கள். பகல் காலங்களில் நோன்பு பிடிப்பார்கள். இரவு காலங்களில் நின்று வணங்குவார்கள். வுழூஃ எனும் சுத்தமும் செய்து கொள்வார்கள். அவர்கள் செய்யும் கொஞ்ச அமல்களை நான் ஏற்றுக் கொள்வேன். லாஇலாஹ இல்லல்லாஹ் எனச் சொன்னதன் நிமித்தம் அவர்களை நான் சுவர்க்கத்தில் நுழைப்பேன் எனக் கூறினான். அப்போது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர் கள் அந்த உம்மத்தின் நபியாக என்னை ஆக்கு! எனக் கேட்டார்கள். அப்போது அல்லாஹ் அந்த நபி அந்த உம்மத்திலேயே தோன்றுவார் என்றான். அப்போது மூஸா நபியவர்கள் அப்படியானால் அந்த நபியினுடைய உம்மத்துக்களில் ஒருவனாக என்னை ஆக்கு! எனக் கேட்டார்கள். அப்போது அல்லாஹ், மூஸாவே! நீர் முந்திவிட்டீர். அவர் பிந்திவிட்டார். எனினும், சுவர்க்கத்தில் அவர்களையும் உங்களை யும் நான் சீக்கிரம் ஒன்று சேர்ப்பேன்

எனப் பதில் கூறினார்கள்.

அறிவிப்பவர்: *அனஸ் ﵁ அவர்கள்*

ஆதாரம்: *அல்கஸாயிஸுல்குப்ரா, பக்கம்: 23, பாகம்: 1*

அகிலம் உருவாகுவதற்குக் கருவாக அமைந்த அற்புத ஜோதி

உலகில் முதன் முதலாகக் கப்பல் செய்து நீரில் அதனை மிதக்கச் செய்த பெருமை நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சாரும். அவ்விவேகம் அவர்களுக்கு எங்கிருந்து வந்தது உத்தம நபி முஹம்மது ﷺ அவர்களின் ஒளியின் பொருட்டால், தனல் பறக்கும் நெருப்புக் குண்டத்தில் தள்ளப்பட்ட இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அந்நெருப்பினால் சுட்டெரிக்கப்படாமல் சுகம் பெற்றார்களே அது எவரால்? உத்தம நபி ﷺ அவர்களின் ஒளிவு இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் முதுகந்தண்டில் ஒளிர்ந்து கொண்டிருந்த காரணத்தினால்,

கலீமுல்லாஹ் (அல்லாஹ்வுடன் பேசியவர்) என்ற சிறப்புப்பட்டத்தைப் பெற்ற மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நைல் நதியைக் கடந்து நடந்து செல்லும் பாக்கியத்தைப் பெற்றார்களே அந்த மாட்சி எவரின் பொருட்டால்!

உத்தமத்திரு நபி முஹம்மது ﷺ அவர்களின் பொருட்டால்.
ரூஹுல்லாஹ் (அல்லாஹ்வின் உயிர்) என்று சிறப்பினைப் பெற்ற ஈசா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணித்தவர்களை உயிர்ப்பித்தார்கள், பிறவிக் குருடர்களுக்கு பார்வையைக் கொடுத்தார்கள், வெண்குஷ்ட, கருங்குஷ்ட நோயாளர்களைக் குணப்படுத்தினார்களே, இந்த ஆற்றலெல்லாம் எங்கிருந்து அவர்களுக்குக்கிடைத்தது. உத்தமத் திரு நபி அவர்களின் ஒளியின் சுடரிலிருந்து தான்! இல்லையென்று மறுக்க முடியுமா?

இதனை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று உண்மைப்படுத்தும் ஒரு ஹதீதைக் கவனியுங்கள். அப்போது புலப்படும். நான் கூறுவது பொருத்தமான வாதம் என்று, ஜாபிர் ﵁ அவர்கள் அறிவிக்கின்றார்கள்:
ஒரு நாள் உத்தம நபியிடம் அல்லாஹ்வின் தூதரே! எங்கள் தலைவரே!

பொருளடக்கம்

வல்ல அல்லாஹ் ஆரம்பத்தில் எதனைப்படைத்தான்? என நான் விளக்கம் கேட்டேன். அப்போது ஜாபிரே! அனைத்திற்கும் ஆதியாய் உனது நபியின் நூரை (ஒளியை) அல்லாஹ் படைத்தான். அந்த நூரே முஹம்மதிய்யாவிலிருந்து மற்றெல்லாவற்றையும் படைத்தான். ஆதியில் படைக்கப்பட்ட (எனது) அந்த நூர் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் "குர்பு" எனும் ஸ்தானத்தில் பண்ணிரண் டாயிரம் ஆண்டுகள் நூராகவே இலங்கிக் கொண்டிருந்தது.

அதன் பின் அந்த ஒளிவு நான்காகப் பங்கிடப்பட்டு ஒரு பாகம் கொண்டு அர் ஷையும் இரண்டாம் பாகம் கொண்டு குர்ஸியையும், மூன்றாம் பாகம் கொண்டு அர்ஷைச் சுமக்கும் மலக்குகளையும், குர்ஷைக்காக்கும் பாதுகாவலர்களும் படைக்கப்பட்டனர். மீதம் உள்ள நான்காம் பாகம் ஹுப்பு என்னும் ஸ்தானத்தில் பண்ணிரண்டாயிரம் ஆண்டுகள் இலங்கிக் கொண்டிருந்தது.

அதன் பின்னர் அதனை நான்காகப் பங்கிடப்பட்டது. இந்த நான்கில் ஒரு பாகம் கொண்டு கலமையும் இரண்டாம் பாகம் கொண்டு லவ்ஹுல் மஹ்பூலை யும், மூன்றாம் பாகம் கொண்டு சுவர்க்கத்தையும் படைக்கப்பட்டது. மீதமுள்ள நான்காவது பாகம் ஃகவ்பு: என்ற ஸ்தானத்தில் பண்ணிரண்டாயிரம் ஆண்டுகள் ஒளிர்ந்து கொண்டிருந்தது. பின்னர் அதனை நான்காகப் பங்கிடப்பட்டது. இந்த நான்கில் முதற்பாகம் கொண்டு மலக்குகளும் மறுபாகம் கொண்டு சூரிய னும் மூன்றாம் பாகம் கொண்டு சந்திரனும் படைக்கப்பட்டது. பின்னர் மீதமுள்ள பாகம் "*ரஜாவு*" என்ற ஸ்தானத்தில் பண்ணிரண்டாயிரம் ஆண்டுகள் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அதன் பின்னர் அதனை நான்காகப் பங்கிடப்பட்டு ஒரு பாகம் கொண்டு *அக்ல்* என்ற உணர்வையும் இரண்டாம் பாகம் கொண்டு ஞானம் எனும் பகுத்தறிவையும் மூன்றாம் பாகம் கொண்டு சமாதானம், பரிசுத்தம் ஆகிய வைகளும் படைக்கப்பட்டது. மீதமுள்ள பாகம் "*ஹயாவு*" எனும் ஸ்தானத்தில் பண்ணிரண்டாயிரம் ஆண்டுகள் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அப்போது அந்த நூரே முஹம்மதிய்யாவை அல்லாஹ் ஏறிட்டு நோக்கினான். ஆகவே, அதிர்ச்சியடைந்த அந்த நூரே முஹம்மதிய்யாவிலிருந்து வியர்வைத் துளிகள் துளிர்ந்து ஒரு இலட்சத்து இருபத்தினாலாயிரம் சொட்டுகள் சொட்டியது. அந்தத்துளிகளிலிருந்து ரசூல்மார்களின் ரூஹுகள் உண்டாக்கப்பட்டன.

இவ்வாறு உண்டாக்கப்பட்ட ரசூல்மார்களின் ரூஹ்கள் சுவாசித்தன. அந்த சுவாசத்திலிருந்து வலிமார்களின் ரூஹ்களும், சத்திய விசுவாசிகளின் ரூஹ்களும் படைக்கப்பட்டன. இதன்படி அர்ஷும் குர்ஸியும் எனது ஒளியிலிருந்து படைக்கப்பட்டவைதான். கர்ரூபிய்யுன், துர்கானிய்யூன்களான அனைத்து மலக்குகளும் எனது ஒளியிலிருந்து படைக்கப் பட்டவர்கள்தான்.

ஏழு வானங்களும், சுவர்க்கமும் அதன் வகுப்புகளும், சூரியனும், சந்திரனும், நல்லடியார்களும் எனது பேரொளியிலிருந்து படைக்கப்பட்டவர்கள்தான். அதன் பின்னர் அல்லாஹ் பன்னிரண்டு திரைகளைப்படைத்து ஒவ்வொரு திரையிலும் ஆயிரம் ஆண்டுகள் வீதம் அந்த ஒளியை ஒளிரச் செய்தான். அடிமைத்தனம், மகத்துவம், சௌபாக்கியம், பயம், கருணை, ஆதரவு, சமாதானம், சகோதரத்துவம், ஞானம், பொறுமை, சத்தியம், விசுவாசம் ஆகிய குணங்களின் அடிப்படையில் ஒவ்வொரு திரையிலும் ஆயிரம் ஆண்டுகள் வீதம் அந்த ஒளி அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்து கொண்டிருந்தது. அதன் பின்னர் அது திரையிலிருந்து புறப்பட்டு பூமியில் இறக்கப்பட்டது. ஆகவே, பூமியில் கிழக்கு முதல் மேற்கு வரை அந்த ஒளி ஒளிர்ந்தது.

அதன் பின்னர் ஹழ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் படைக்கப்பட்டார்கள். அவர்களின் நெற்றியில் எனது ஒளி ஒளிர்ந்து கொண்டு இருந்தது. அதன் பின்னர் ஷீது நபியவர்களுக்கு அது மாறியது. இப்படியாக ஒவ்வொரு பரிசுத்தவான்களிலிருந்தும் பரிசுத்தவான்களுக்கு மாறி மாறி வந்து இறுதியாக அப்துல் முத்தலிபின் மகன் அப்துல்லாஹ்வுக்கு மாறி அவர்களிலிருந்து எனது தாயார் ஆமினா மாதாவின் கர்ப்பக் குவளையில் தங்கி இப்பூவுலகில் நான் பிரசவிக்கப்பட்டேன். நான் ரசூல்மார்களின் தலைவனாகவும் ரஹ்மதுன் லில் ஆலமீனாகவும், கடைசித்திருத்துதாதராகவும் ஆகியதோடு கை, கால்கள் வெளுத்தவர்களின் தலைவராகவும் ஆக்கப்பட்டுள்ளேன்.

ஜாபிரே! இப்படித்தான் உங்கள் நபியின் பரிணாமம் பரிமளித்தது என்று நாயகம் ﷺ அவர்கள் தங்களது ஒளியின் இரகசியத்தை விளக்கிக் கூறினார்கள். அப்படியென்றால் நமது நபிகளாரின் மகத்துவத்தை மட்டிட முடியுமா? இதைத்தான் **அல்லாமா ஸதகதுல்லாஹில் காஹிரி குத்திஸ ஸிர்ரஹூ அவர்கள்:**

بديع جمال أول الخلق إذدنا إلى الله نورا سبح الله ديدنا
فكان لكل النور أصلا ومعدنا بنور رسول الله أشرقت الدنا
ففي نوره كل يجئ ويذهب

அழகில் நிகரில்லாதவர்களாகவும் படைப்புகளில் முந்தினவர்களாகவும் வெளியான நாயகம் முஹம்மது ﷺ அவர்கள் ஒளிவாக அல்லாஹ்வை நெருங்கின போது அவனை ஆதியில் அநேக காலங்களாக தஸ்பீஹ் செய்து கொண்டிருந்தார்கள். எனவே, அவர்கள் எல்லா ஒளிவுகளுக்கும் மூலாதாரமாகவும் எல்லாம் விளையும் தலமுமானார்கள்.

قديما براه الله نورا بلادم على نوره الأملاك لم تتقادم
فأملاكه فضلا على وهو آدمي بدا مجده من قبل نشأة آدم
وأسماءه من قبل فى العرش تكتب

பூர்வீகத்தில் அல்லாஹ் முஹம்மது ﷺ அவர்களை இரத்தமின்றி ஒளிவாகப் படைத்தான். அவர்களின் ஒளிவைவிட மலக்குகள் முந்தவில்லை. எனவே. அவர்கள் மனித இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வரிசையால் மலக்குகளை விட மேலாகிவிட்டார்கள். நாயகம் ﷺஅவர்களின் தலைமைத்துவம் ஆதம் عليه السلام அவர்கள் படைக்கப்பட முன்னரே வெளியாகிவிட்டது. அவர்களின் திருநாமம் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் படைக்கப்பட முன்பே அர்ஷின் தூண்களில் எழுதப்பட்டுவிட்டது எனப்பாடியுள்ளார்கள்.

மேலும், இமாம் பூசரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்:

وكل آي أتى الرسل الكرام بها فإنما اتصلت من نوره بهم

மேன்மை மிக்க மற்ற எல்லாத் தூதர்களும் கொண்டு வந்த அற்புதங்கள் அனைத்தும் பெருமானார் அவர்களின் ஒளிவிலிருந்து பெற்றுக் கொண்டவையே எனப்பாடியுள்ளார்கள்.

பொதுவாகச் சொல்வதென்றால் உலகில் தோன்றிய ஒரு இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்கள், றசூல்மார்கள் ஆகிய அனைத்து சீர்த்திருத்தவாதிகளின் சீர்த்திருத்த கருவாக, பிரச்சாரக் கருவியாக, கொள்கையாக, கோட்பாடாக, இலட்சியமாக இருந்தது. எங்கள் நபினாா முஹம்மது ﷺ அவர்களின் ஒளிவுதான் என்பதனை உணர்த்தி வைக்கின்றார் இமாம் பூஸரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

கஸ்தூரி மணம் கமழும் காதமுன் நபி

மனிதன் தனது ஜடலத்திலிருந்து வெளியாகும் வியர்வையின் துர்நாற்றத்தைப் போக்கிக் கொள்ள எத்தனை எத்தனையோ நறுமணங்களைப் பாவிக்கின்றனர். எனினும் அவைகளின் நறுமணங்கள் சற்று நேரத்தின் பின் நீங்கி பழைய துர்நாற்றம் வருவதை வாழ்க்கையில் காணுகிறோம். இதற்கு நேர்மாற்றமாக எமது ஏந்தலின் மேனியை நறுமணமாகவும், அதிலிருந்து வெளியேறும் வியர்வை கஸ்தூரயாகவும் இருந்த வரலாற்றைக் காணுகிறோம்.

நாயகம் ﷺ அவர்கள் எங்கள் இல்லம் நுழைந்து எங்கள் வீட்டில் கைலூலாத் தூக்கம் தூங்கினார்கள். அவர்களின் மேனியிலிருந்து வியர்வைத்துளிகள் வெளி யேற ஆரம்பித்தன. எனது தாயார் ஒரு சீசா எடுத்து வந்து அந்த வியர்வையை மெதுவாக அந்த சீசாவில் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்நேரம் நபியவர்கள் தூக்கத்திலிருந்து விழித்து, ஏ...உம்மு ஸுலைமே! இது என்ன செய்து கொண் டிருக்கிறீர் எனக் கேட்டார்கள். அப்போது நாயகமே இந்த வியர்வையை எங் களுடைய மணப்பொருளாக நாங்கள் ஆக்கிக் கொள்வோம். இது எல்லா மண வஸ்துக்களை விடவும் அதிக மணம் வீசும் நறுமணமாகும் என்றார்கள்.
அறிவிப்பவர்: அனஸ் ؓ அவர்கள்.
ஆதாரம்: முஸ்லிம் ஷரீப்- அல்-கஸாஇஸுல் குப்ரா பாகம்: 1, பக்கம்: 114.

நான் நூல் நூற்றுக் கொண்டிருந்தேன். அப்போது நபியவர்கள் தோலறுந்த செருப்பைத் தைத்துக் கொண்டிருந்தார்கள். அந்நேரம் அவர் நெற்றியிலிருந்து வியர்வை வெளியானது. அவ்வியர்வை ஒளிவாகப் பிரகாசிக்கிறது. நான் திகில டைந்தேன். என்னைப் பார்த்து உத்தம நபியவர்கள் என்ன திகிலடைந்து விட்டாயா? எனக் கேட்டார்கள். அதற்கு நான் உங்களின் நெற்றியில் வியர்வை

வெளியாகிறது. அது ஒளிவாக பிரகாசிக்கிறது. உங்களை அபூ கபீர் அல்ஹு தளிய்யி கண்டால் அவர்கள் பாடியிருக்கும் கவிதைக்குப் பொருத்தமானவர் நீங்கள் தான் என்று அறிந்து கொள்வார்கள் எனக் கூறிவிட்டு,

ومبرأ من كل غبر حيضة وفساد مرضعة وداء مغيل

وإذا نظرت إلى اسرة وجهه برقت بروق العارض المتهلل

கற்பிணிகளிடம் பால் அருந்துவதை விட்டும். கெட்ட பெண்களிடத்தில் பால் அருந்துவதை விட்டும். மாதவிடாய் என்ற ஊத்தையை விட்டும் நீக்கப்பட் டவர்கள். நீ அவர்களின் முகம முழுவதையும் பார்த்தால் இலங்கக்கூடிய அம்பைப் போன்று அவர்களின் முகம் இலங்குவதைக் காணுவாய் எனப் பாடியுள்ளார்கள்.

அறிவிப்பவர்: *ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.*

ஆதாரம்: *கஸாயிஸுல் குப்ரா, பாகம்: 1, பக்கம்: 115.*

நாயகம் ﷺ அவர்கள் மனிதர்களில் மிகவும் முகம் அழகானவர்களாகவும் நிறத்தால் அவர்களைவிட ஒளிவானவர்களாகவும் இருந்தார்கள். நாயகத்தை வர்ணிப்பவர் யாருமே அவர்களை பூரணச் சந்திரனுக்கு ஒப்பிட்டுத்தான் வர்ணிப்பார்கள். ஏன் அல்லாஹ்வும் தாஹா பூரணச்சந்திரனே என்றுதான் குர்ஆனில் வர்ணித்துள்ளான். ஆச்சரியப்படுகின்றீர்களா? த–9, ஹ–5, 9+5 = 14 பூரணச்சந்திரன் என்பதாதகும்.

"அவர்களின் முகத்திலிருந்து வெளியேறும் வியர்வைத்துளிகள் முத்துக்களைப் போன்றும் நறுமணம் வீசும் கஸ்தூரியை விட மனமுடையதாகவும் இருக்கும்".

அறிவிப்பவர்: *ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.*

ஆதாரம்: *அல்–கஸாயிஸுல் குப்ரா. பாகம்: 1, பக்கம்: 115.*

ஒரு மனிதர் நாயகம் ﷺ அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே நான் எனதுமகளைத்திருமணம் செய்து கொடுத்து விட்டேன். நீங்கள் ஏதாவது உதவி எனக்குச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன் எனக் கூறினார். இது கேட்ட நபியவர்கள் வாய் அகலமான ஒரு கீசாவும் ஒரு கம்புக்குச்சியும் கொண்டு வரும் படி ஏவினார்கள். அம்மனிதர் அவ்விரண்டையும் கொண்டு வந்தார். நாயகமவர்கள் குச்சியினால் தனது கொடுங்கைகளிலிருந்தே வியர்வையை வளித்து போத்தலிலிட்டு

அதனை நிரப்பி அம்மனிதர் கையில் கொடுத்து இதை எடுங்கள். உங்களின் மகளுக்கு இந்தக் குச்சியை இந்த கீசாவில் நுழைத்து எடுத்து இதனால் மணம் பூசிக் கொள்ளச் சொல்லுங்கள் எனக் கூறினார்கள். அப்படியே அம்மனிதர் தனது மகளுக்கு ஏவினார்கள். அவ்வாறே அவளும் மணம் பூசிக் கொள்ள முழு மதீனா நகர் மக்களும் அம்மணத்தை நுகர ஆரம்பித்தார்கள். அவ்வீட்டிற்கு மணமானவர்களின் வீடு எனவும் பெயரிட்டார்கள்.

அறிவிப்பவர்: *ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.*

ஆதாரம்: *அல்-கஸாயிஸுல் குப்ரா, பாகம்:1, பக்கம்: 115.*

இதைத்தான் ஸதகதுல்லாஹில் காஹிரி அவர்கள்:

مواشة تبغي منه ماهو يعرق لأن جميع الطيب في ذاك يغرق

"புதிய பெண்களுக்கு தலைவாரந்து சிங்காரிக்கும் பெண்கள் நாயகத்தில் வியர்க்கும் வேர்வையைத் தேடுவார்கள். ஏனென்றால், அனைத்து நறுமணங்களின் வாசனையும் இந்த மணத்தின் வாசத்தில் ஆழ்ந்து போகும் எனப்பாடியுள்ளார்கள்."

பனீகுறைஷ் என்ற கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் அறிவிக்கிறார்: நாயகம் ﷺ அவர்கள், மாலிக்குடைய மகன் மாஇஸ் செய்த தவறுக்காக குற்றப்பரிகாரம் வழங்கும் போது நான் எனது தந்தையோடு அவ்விடத்திலிருந்தேன். மாஇஸ் இப்னு மாலிகின் மேனியில் கல் போய் பட்டபோது நான் திடுக்கமடைந்தேன். நாயகமவர்கள் அப்போது என்னை அணைத்துக் கொண்டார்கள். அவர்களின் இரு கைகளின் கக்கங்களிலிருந்தும் கஸ்தூரியின் வாடையைப் போன்று வியர்வை என்மீது வழிந்தோடியது என்பதாக.

ஆதாரம்: *அல்-கஸாஇஸுல் குப்ரா.*

"நாயகம் ﷺ அவர்கள் மதீனாவின் பாதைகளின் ஒரு பாதையில் நடந்து சென்றால் நாயகத் தோழர்கள் அவர்களில் நின்றும் உண்டான நறுமணமான கஸ்தூரி வாடையை நுகர்வார்கள். இதன் மூலம் இந்தப்பாதையினால் தான் நபியவர்கள் சென்றுள்ளார்கள் என உணர்ந்து கொள்வார்கள்" என்று அனஸ் رضي الله عنه அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஆதாரம்: *அல்-கஸாஇஸுல் குப்ரா. பாகம்: 1, பக்கம்: 115.*

இதைத்தான் **அல்லாமா ஸதகதுல்லாஹில் காஹிரி ﷺ அவர்கள்:**

اذا سار فجا فاح طيب محمد ثلاثة أيام كمسك مقرمد

நாயகம் ﷺ அவர்கள் ஒரு பாதையில் நடந்தால் அவர்களின் நருமணம் உதிர்க்கப்பட்ட கஸ்தூரியைப் போல் மூன்று நாட்களுக்கு அந்தப்பாதை மணம் வீசிக் கொண்டிருக்கும் எனப்பாடியுள்ளார்கள்.

நபியவர்களை ஞாபகம் செய்யுமிடத்திலிருந்து வெளியாகும் கஸ்தூரி மணத்தின் மகத்துவம்:

ஒரு சபையில் அண்ணலாரின் பெயர் சொல்லப்பட்டால் அல்லது அவர்களின் மீது ஸலவாத்துச் சொல்லப்பட்டால் அந்த சபையிலிருந்து ஒரு நறுமணம் வெளியாகும். அதன் வாசனையை மனுவர்க்கம், ஜின் வர்க்கங்களைத்தவிர மற்றெல்லாப் படைப்பினங்களும் நுகர்ந்து கொள்ளும். இதன் வாடையை

இவர்கள் உணர்ந்து கொண்டால் அதன் இன்பத்தில் மூழ்கி உலக விடயங் களை மறந்து விடுவார்கள். அதனால் உலகத்தின் நிலை சீர் கெட்டுவிடும். இப்படி வெளியான அவ்வாடையை நுகர்ந்த வஸ்துக்கலடங்களும் அந்த சபையில் உள்ளவர்களுக்காக பிழை பொறுக்கத் தேடும் அச்சபையில் ஒரு இலட்சம் நபர்கள் சமூகம் கொடுத்திருந்த போதிலும் சரிதான் என நபித்தோழர் களில் ஒருவர் அறிவித்துள்ளார்கள்.

இதையே ஸதகதுல்லாஹில் காஹிரி அவர்கள்:

ذكى يفوح المسك من مخرج اسمه زكى جميل فاق كلا بوسمه

நாயகமவர்கள் நறுமணம் கடினமானவை. அவர்களின் திருநாமம் வெளியா குமிடத்திலிருந்து கஸ்தூரி வாடை வீசும். இன்னும் அவர்கள் தூய்பரவானவர்கள். அவர்கள் தனது அடையாளங்களைக் கொண்டு எல்லோரையும் விட மேலிட் டுவிட்டார்களே! அப்படியான அழகுடையவர்கள் எனப்பாடியுள்ளார்கள்.

மண்ணறைக்குள் மாநபியின் நிலை

"உங்களின் நாட்களில் மிகச் சிறந்த நாள் வெள்ளிக்கிழமையாகும். எனவே, அந் நாளில் என்மீது அதிகமாக ஸலவாத்துச் சொல்லுங்கள். ஏனெனில் நீங்கள் சொல் லுகின்ற ஸலவாத்துக்கள் எனக்கு எடுத்துக்காண்பிக்கப்படுகின்றது என நாயக மவர்கள் கூறியபோது ஸஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதரே! நீங்களோ உக் கிப்போன நிலையில் நாம் சொல்லுகின்ற ஸலவாத்து எவ்வாறு உங்களுக்கு எடுத்து காண்பிக்கப்படும்? எனக் கேட்டார்கள். அப்போது நபியவர்கள் நிச்சயமாக அல்லாஹ் நபிமார்களின் மேனிகளை மண்ணுக்கு சாப்பிடுவதை ஹராமாக்கியுள்ளான்" எனப்பகர்ந்தார்கள்.

***ஆதாரம்:** அல்-கஸாஇஸுல் குப்ரா, பாகம்: 1, பக்கம்: 489.*

"நிச்சயமாக நபிமார்களின் மேனிகளைப் பூமி சாப்பிடாது. சிங்கம், புலி போன் றவைகளும் சாப்பிடாது" எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

***ஆதாரம்:** அல்-கஸாஇஸுல் குப்ரா, பாகம்: 2. பக்கம்: 489.*

"எனது உயிர் யார் கைவசம் இருக்கின்றதோ அவன் (அல்லாஹ்) மீது நிச்சயமாக, சத்தியமாக ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வானத்திலிருந்து இறங்குவார்கள். பின்னர் எனது கப்றுக்கருகில் வந்து நின்று யா முஹம்மத் ﷺ என்று அழைப்பார்கள்.

நான் அவரின் அழைப்பிற்கு பதில் சொல்வேன்" என நாயகம் ﷺ அவர்கள் கூறினார்கள்.

***அறிவிப்பவர்:** அபூஹுரைரா ؓ அவர்கள்.*

***ஆதாரம்:** அல்-கஸாஇஸுல் குப்ரா. பாகம்: 2, பக்கம்: 490.*

"ஹர்ரானுடைய யுத்த நாட்களில் மஸ்ஜிதுந் நபவியில் என்னைத்தவிர வேறுயாரும் இருக்கவில்லை. அந்நாட்களில் ஒவ்வொரு நேரத் தொழுகையின் பொழுதும் அருமை நபியின் கப்ருக்குள்ளிருந்து அதான் ஒலிக்கும் சப்தத்தைக் கேட்பேன்" என ஸஈத் இப்னு முஸய்யப் ؓ அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

***ஆதாரம்:** அல்-கஸாயிஸுல் குப்ரா, பாகம்: 2, பக்கம்: 490.*

"நபிமார்கள் தங்களின் கப்றுகளுக்குள் உயிரோடு இருக்கின்றார்கள்" என நாயகம் ﷺ அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: *அனஸ் ؓ அவர்கள்.*

ஆதாரம்: *அல்-கஸாஇஸுல் குப்ரா, பாகம்: 2,* பக்கம்: 490.

எனவே, நாயகம் ﷺ அவர்கள் தனது மண்ணறைக்குள் அன்று வைக்கப் பட்டிருந்தது போன்று இன்றும் வாடாமல் இருக்கின்றார்கள். என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

இதையே **அல்லாமா ஸதகதுல்லாஹில் காஹிரி ؓ அவர்கள்:**

واجمع اهل الله اهل التقائه على انه حى كما في بقائه

"தக்வாவுடைய மக்களான அல்லாஹ்வை அறிந்த ஆரிபீன்களும் உலமாக்களும் நபி நாயகம் அவர்கள் உலகிலிருந்தது போலவே இப்போதும் தனது கப்றுக்குள்ளே உயிரோடு இருக்கின்றார்கள் என்பதன் பேரில் ஒருமித்த கருத்துடையவர்களாக இருக்கின்றார்கள்" எனப்பாடியுள்ளார்கள்.

நிச்சயமாக நாயகம் ﷺ அவர்கள் தனது உடலத்துடனும், உயிருடனும் இருக்கின்றார்கள். மேலும், நிச்சயமாக அவர்கள் பூமியின் பல கோணங்களிலும்,

வானுலகிலும் சஞ்சாரம் செய்கின்றார்கள். அவர்களின் மேனியில் நின்றும் எதுவுமே மாற்றமடையாமல் மறைவதற்கு முன் மண்ணுலகில் எவ்வாறு இருந் தார்களோ அவ்வாறே இருக்கின்றார்கள். அவர்கள் மலக்குகள் தங்களின் உடலத்துடனும் உயிருடனும் இருப்பவர்களாக இருக்கும் நிலையில் எவ்வாறு எம் பார்வைகளை விட்டும் மறைந்திருக்கின்றார்கள். எனவே, அல்லாஹ் யாரையாவது நபியைப் பார்ப்பது கொண்டு சங்கையாக்க நாடினால் அம்மனிதரின் கல்பின் திரைகளை நீக்கிவிட்டு நபியவர்கள் எந்தக் கோலத்தில் இருக்கி றார்களோ, அதே கோலத்தில் பார்க்கச் செய்வான் என அல்-குர்ஆன் விரிவுரை யாளர்கள் கூறுகின்றனர்.

பொருளடக்கம்

وأغزر جواد من سحاب تماطرا   وعم نداه كل ماض وماطرا

مجيب وإن فى الحسن عنا تساترا   قريب لأرباب الحوائج ماترى

لأحمد حجابا ولا الباب يغلق

"நாயகம் ﷺ அவர்கள் மழை பொழியச் செய்யும் மேகத்தை விட அதிகமான கொடையாளர். அவர்களின் கொடை முன் சென்று போன வஸ்துக்களடங் கலையும் இனி புதிதாக வருகிற வஸ்துக்களடங்கலையும் அடைய வளைந்து கொண்டது. அவர்கள் வெளிப்பார்வையில் எங்களை விட்டும் மறைந்திருந்தாலும் எமது வேண்டுகோளுக்குப் பதில் சொல்கின்றவர்கள். மேலும், அவர்கள் தேவை உடையோரை நெருங்கினவர்கள். அவர்களின் வாசல் படியில் காவற் காரனுமில்லை. அவ்வாசல் பூட்டப்படவும் இல்லை" எனப்பாடுகிறார்கள்.

அண்ணலார் அவர்கள் வானுலகத்திலும் பூவுலகத்திலும் சஞ்சாரம் செய்கின் றார்கள். அது எவ்வாறு நடக்கலாம். *அல்-குர்ஆன்* பகர்கின்றது:

حتى إذاجاء أحدهم الموت قال رب ارجعون لعلى أعمل صالحا فيما

تركت كلا إنها كلمة هو قائلها ومن وراءهم برزخ إلى يوم يبعثون

سورة المؤمنون ١٠٠،٩٩،٩٨.

"முடிவாக அவர்களில் ஒருவருக்கு மரணம் வந்து விடுமானால் என் இரட் சகனே! என்னை உலகத்திற்கு அனுப்பி வைத்துவிடு! உலகில் நான் விட்டு வந்ததில் இனி நல்லகாரியங்களைச் செய்வதற்காக என்று கூறுவான். அவ்வாறில்லை. நிச்சயமாக அது அவன் கூறக் கூடிய வெறும் வார்த்தையாகும். அதனால், எப்பிரயோசனமும் இல்லை. இன்னும் அவர்கள் மறுமையில் எழுப்பப்படுகின்ற வரைக்கும் அவர்கள் முன்னால் தடுப்பு இருக்கிறது. அதனால், அவர்கள் உலகத்திற்கு திரும்பி வர ஆற்றல் பெறமாட்டார்கள்". எனக் கூறுகின்றதே எனக் கேட்கலாம்.

இதோ! இக்கேள்விக்குப் பதில்:

பர்ஸஃக் திரை என்பது, அது அவர்கள் மரணித்த நேரத்திலிருந்து மறுமையில் எழுப்பப்படுகின்ற நேரம் வரைக்கும் உள்ள காலமாகும். அதாவது, நிச்சயமாக மரணித்து மண்ணறையில் அடக்கப்பட்டவர்களுக்கும், அவர் இவ்வுலகிற்கு திரும்பி வருவதற்கும் இடையில் திரையும், தடையும் இருக்கிறது. அது மரணமாகும். எனவே, இதை விளங்கிக் கொண்டால் மரணித்தவர்கள் தங்களுடைய ஜடலத்தோடும், உயிரோடும் இவ்வுலகிற்கு ஒரு காலமும் வரமாட்டார்கள். அவர்கள் எழுப்பப்படுவதெல்லாம் மறுமையில் தான் இவ்வாறு நடப்பது. நபிமார்களுக்கும் தான், மற்றவர்களுக்கும் தான்.

ஆனாலும், நபிமார்களைச் சில ஸாலிஹீன்கள் இவ்வுலகில் கண்டோம் என்பதும், அவர்கள் இவ்வுலகில் நடமாடுகிறார்கள் என்பது அவர்களின் ஆத்மா எடுக்கின்ற கோலத்தைத் தவிர வேறொன்றுமில்லை.

ஆதாரம்: *தப்ஸீர் ஸாவி, பாகம்: 3, பக்கம்: 117.*

மாநபியின் மண்ணறையின் மாண்பு

قال كعب الأخبار رضى الله عنه ما من يوم يطلع إلا نزل سبعون ألفا من الملائكة حتى يحفوا بقبر النبى صلى الله عليه وسلم يضربون بأينحتهم ويصلون على النبى صلى الله عليه وسلم حتى إذا أمسوا عرجوا وهبط مثلهم فصنعوا مثل ذلك حتى إذا انشقت عنه خرج فى سبعين الفا من الملائكة يرفونه {دارمي}

"ஒவ்வொரு நாளும் சுபஹ் வேளையில் எழுபதுனாயிரம் மலக்குகள் மாநபியின் கப்றைச் சூழ வந்து நின்று மாலை வரையும் அவர்களை ஸியாரத்து செய்து ஸலவாத்து சொல்லிக் கொண்டு நிற்கின்றார்கள். மாலை நேரமானவுடன் இவர்கள் வானுலகத்தை நோக்கிப்புறப்பட இன்னும் எழுபதுனாயிரம் மலக்குகள் மறுநாட் காலை நாயகத்தின் கப்றைச் சூழ்ந்து சிறகடித்து ஸலவாத்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது நபியவர்கள் எழுபதினாயிரம் மலக்குகள் புடை சூழ கப்ரிலிருந்து எழுப்பப்படுகின்ற வரைக்கும் நடை பெற்றுக் கொண்டே இருக்கும்" என கஃபுல் அஹ்பார் ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

இதனையே **ஸதகதுல்லாஹ் அப்பா அவர்கள்:**

مساء وإصباحا بغير تصرم   ملائكة فيها تزور تحوم

காலையிலும் மாலையிலும் ஓய்வொரு நாளும் ஓயாமல் அல்லாஹ்வுடைய மலக்குகள் மதீனாவில் தங்களைச் சுத்தி நின்று தங்களை ஸியாரம் செய்கிறார்கள் என்றும், இன்னுமோரிடத்தில்:

وروضته لم يخل يوما فنائها   وقبته لم يخش وقتا فنائها

நாயகமவர்களின் சிறப்பான ரௌலாவாகிறது, அதன் பகுதிகள் ஒரு நாளும் மனிதர்களை விட்டும், மலக்குகளை விட்டும் ஒழிந்திருப்பதில்லை. இன்னும் அதன் குப்பாவாகிறது, எந்த நேரத்திலும் அதன் அழிவைப் பயப்படுவதில்லை எனப்பாடுகிறார்கள்.

இன்னும் அந்த சிறப்பான **ரௌலாவைப்பற்றி:**

ومد فنه قد فاق مقدار شبره   نفائس ياقوت الخلود وتبره

فمن أجل إجلال النبى وقدره   ثنى الوفد أعناق النياق لقبره

وسارت بهم تحت المحامل تلهث

"நாயகம் ﷺ அவர்கள் அடங்கியிருக்கும் கப்றாகிறது அதன் ஒரு ஜாண் அளவு நிரந்தரமாகவுள்ள சுவர்க்கத்தின் அபூர்வமான மாணிக்கங்களையும் தங்கங்களையும் விட மேலிட்டுவிட்டது. எனவேதான், அவர்களின் தகுதியையும் வலுப்பமாக்குவதற்காக வேண்டி ஹாஜிமார்கள் தங்களின் வாகனங்களை புனித மிகுமதீனாவின் பக்கம் ஓட்டுகின்றனர். எனவே, அவைகள் இழைத்த வண்ணம் அவர்களைச் சுமந்து செல்கின்றன" என்றும் பாடியுள்ளார்கள்.

நாயகத்தை தன்னகத்தே வைத்துக் கொண்டிருக்கும் மண்ணறையானது, சுவர்க்கத்தை விடவும், கஃபதுல்லாஹ்வை விடவும் இல்லை. அர்ஷை விடவும் ஏற்றமானதாகும். இதனாலேதான்,

تراب حواه فاق عرشا بسره   كذا عن سيوطى إمام منكت

நாயகத்தின் திருமேனியைப் பொதிந்து கொண்டிருக்கும் மண்ணானது, அவர்களின் இரகசியத்தைக் கொண்டு அர்ஷை விடவும் வரிசையால் மேலிட்டுவிட்டது. இப்படித்தான் இமாம் சுயூத்தி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாக வந்திருக்கின்றது.

எனவே, இப்படியான அந்தஸ்துடைய ரௌலாவை ஆண்டாண்டு தோறும் தரிசிக்க அல்லாஹ் நம்மனைவருக்கும் அருள் புரிவானாக!

கேட்டு வந்தோருக்கு இல்லையென்றுரைக்காத ஏந்தல் நபி

ஒரு சமயம் அண்ணலார் ﷺ அவர்கள் ஸஹாபாக்களுக்கு தொழுகை நடாத்தினார்கள். தொழுகை முடிந்தவுடன் கிப்லாவை முன்னோக்கி இருந்து கொண்டார்கள். அருமை ஸஹாபாப் பெருமக்களும் அண்ணலாரைச் சூழ அமர்ந்திருந்தார்கள். அப்படியிருக்கும் நேரத்தில் வயது முதிர்ந்த பலஹீனமடைந்த ஒரு மனிதர் அரபகத்தின் தூரப்பிரதேசங்களிலிருந்து நபிகளாரிடம் வந்து, யா நபியல்லாஹ்! நான் பசித்தவனாக இருக்கின்றேன். எனக்கு உணவு கொடுங்கள். சரியான உடையில்லாமல் இருக்கின்றேன். எனக்கு உடை கொடுங்கள். நான் ஏழையாக இருக்கின்றேன். ஆகவே, என்னைப் பணக்காரன் ஆக்குங்கள் என வேண்டிக் கொண்டார்.

யார் வந்து கேட்டாலும் இல்லையென்று சொல்லாத அண்ணலார் இங்கும் இல்லை என்று சொல்லவில்லை. எனினும், உங்களின் நிலைக் கேற்ப இப்பொழுது ஒன்றுமில்லை. ஆனாலும், நன்மைக்கு வழிகாட்டுபவன் நன்மையைச் செய்த வனைப் போன்றாவான் எனக் கூறியவர்களாக அல்லாஹ்வையும் அவனது தூதரையும் யார் விரும்புகின்றார்களோ, அல்லாஹ்வும் ரசூலும் யாரை விரும் புவார்களோ, தனது ஆத்மாவை விட அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் வார்த்தைகளை யார் மேலாகக் கருதுவார்களோ அவர்களின் இல்லமாகிய பாத்திமா நாயகியின் வீடு செல்லுங்கள்! எனக் கூறிவிட்டு பக்கத்தில் அமர்ந்திருந்த தோழர் ஹழ்ரத் பிலால் ؓ அவர்களை அழைத்து, பிலாலே! எழுந்திருங்கள்! இவர்களை அழைத்துச் சென்று பாத்திமா நாயகியின்

வாசலில் நில்லுங்கள்! எனக் கூறினார்கள். அவ்வாறே, பிலால் ﷺ அவர்களும் அழைத்துச் சென்று பாத்திமா நாயகியின் வாசலில் நிற்க அம்மனிதர் உரத்த தொனியில் நுபுத்துவத் தின் வீட்டை உடையவர்களே!, மலக்குகளின் வருகை அடிக்கடி நிகழும் இடத்தை உடையவர்களே!, ரூஹுல் அமீன் எனும் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அடிக்கடி இறங்கும் இடத்தை உடையவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாவதாக! எனச் சத்தமிட உள்ளே இருந்த அன்னை பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் வாசலிலே யார்? எனக் கேட்டார்கள்.

அப்போது அம்மனிதர் தூரமான பிரதேசத்திலிருந்து மனிதர்களுக் கெல்லாம் தலைவரான உங்களின் தந்தையான அருமை நபியுல்லஹ்வை முன்னோக்கி வந்த வயோதிபன் நான். நபியின் மகளாரே! நான் உடுப்பதற்கு ஒழுங்கான உடையின்றி இருக்கின்றேன். பட்டினியால் வாடிக் கொண்டிருக்கின்றேன். எனக்கு உதவி செய்யுங்கள். அல்லாஹ் உங்களுக்கு கிருபை செய்வான் என அக்கிழவர் கூறினார். அன்னை பாத்திமாவும் அறிவின் வாயில் அருமை அலியும், ஏந்தல் எங்கள் அன்பு நபியும் மூன்று நாட்களாக ஏதுமே சாப்பிடாத வேளையது. அன்னை பாத்திமா அவர்களிடமிருந்த செம்மறியாட்டுத் தோல், அதுவும் அருமை மக்கள் ஹஸன், ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹுமா இருவரும் இரவில் படுத்துறங்கும் தோல், அதை எடுத்து வந்து வீட்டுக் கதவைத் தட்டியவரே! இதை எடுங்கள்! அல்லாஹ் எது சிறந்ததாக இருக்குமோ அதை கொடுக்கப் போதுமானவன் எனக் கூறிக் கொண்டு அத்தோலை அம்மனிதர் கையில் கொடுக்க, அவ்ரோ முஹம்மத் ﷺஅவர்களின் மகளே! பசி என்று முறைப் பட்டேன். செம்மறியாட்டின் தோலைக் கொடுக்கின்றீர்கள். இதனால் நான் என்ன செய்வது எனக் கேட்க, உடனே பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தன் கழுத்திலிருந்த மாலையைக் கழற்றி அம்மனிதரிடம் கொடுத்து இதை எடுத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் எது சிறந்ததாக இருக்குமோ அதை உங்களுக்குப் பகரமாகப் போதும் என்றார்கள். பின்னர் அவ்வயோதிபர் நாயகம் ﷺ அவர்களின் பள்ளிக்கு வந்தார். அங்கு நாயகமவர்கள் அருமை ஸஹாபாக்களோடு உட்கார்ந்திருக்கின்றார்கள். அவ்வயோதிபர் நாயகத்தை நோக்கி கூறுகின்றார். யா ரசூலல்லாஹ்! பாத்திமா நாயகியவர்கள் இந்த மாலையை எனக்குக் கொடுத்து இதைக் கிரயத்திற்கு விற்று விடுங்கள். அல்லாஹ் இதை விட சிறந்ததொன்றை உங்களுக்குப் பகரமாக்கப் போதும் எனக் கூறி னார்கள் என்பதாக.

இதைக் கேட்டவுடன் நபியவர்கள் அழ ஆரம்பித்து விட்டார்கள். உடனே, அம்மார் இப்னு யாஸிர் ؓ அவர்கள் எழுந்து, யா ரசூலல்லாஹ்! இம்மாலையை வாங்குவதற்கு எனக்கு அனுமதி கொடுக்கின்றீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் அம்மாரே! வாங்குங்கள்!. அந்த மாலையை வாங்குவதற்கு மனித வர்க்கமும் ஜின் வர்க்கமும் ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் அவர்களை நரகத்தில் போட்டு வேதனை செய்ய மாட்டான் என்றார்கள்.

உடனே அம்மார் இப்னு யாஸிர் ؓ அவர்கள்: அரபியே இந்த மாலையைய் எவளவு கிரயத்திற்கு விற்பீர் எனக் கேட்டார்கள். அவ்வயோதிபர் எனது பசியைப் போக்கிவைக்கும் அளவுக்கு இறைச்சி, உரட்டி, எனது மர்மஸ்தானத்தை மறைத்து தொழுது கொள்ளக் கூடிய மென்நேசப் போர்வை, எனது குடும்பத்துடன் போய்ச் சேர்ந்து கொள்ள கொஞ்சம் பணம் இவைகள் இருந்தால் போதும். என்றார். அம்மார் இப்னு யாஸிர் ؓ அவர்கள் உங்களுக்கு இருபது தீனார்களும், இருநூறு திர்ஹங்களும், எமன் தேசத்து போர்வை ஒன்றும், உங்களின் குடும்பத்துடன் போய்ச் சேர்ந்துகொள்ள ஒரு வாகனமும், பசியைப் போக்கிக் கொள்ள மணிக்கோதுமை உரட்டியும், இறைச்சியும் தருகிறேன் என்றார்கள். இதைக் கேட்டவுடன் அவ்வரபி ஏ மனிதரே! பணத்தினால் இந்த அளவுக்கு கொடை கொடுக்க உங்களை கொடையாளியாக்கிவைத்தது எது எனக் கேட்டார். அம்மார் இப்னு யாஸிர் ؓ அவர்கள் அவரை அழைத்துச் சென்று பொறுப்பேற்றதைக் கொடுத்தார்கள். அவைகளைப் பெற்றுக் கொண்ட அம்மனிதர் மீண்டும் நாயகம் ﷺ அவர்களிடம் வந்தார். அப்போது நபியவர்கள் அவரைப்பார்த்து பசியைப் போக்கிக் கொண்டீர்களா? உடை அணிந்து கொண்டீர்களா? எனக் கேட்டார்கள். இது கேட்டவுடன் அரபி அல்லாஹ்வின் தூதரே! எனது தாயும், தந்தையும் நீங்களே. ஆம், நான் சீமான் ஆகிவிட்டேன் என்றார். இதுகேட்ட நாயகமவர்கள், பாத்திமா செய்த உதவிக்காக அவர்களுக்கு நன்றி செலுத்தும் என்றார்கள். உடனே, அம்மனிதர் இரு கைகளையும் உயர்த்தி நாயனே! நீயோ, நாங்கள் புதிதாக உண்டாக்கிக் கொள்ளாத நாயன். வணக்கத்திற்குறியவன். உன்னையன்றி வேறுயாரும் இல்லை. நீ எக்காலமும் இருக்கின்றவன். அன்னை பாத்திமாவுக்கு எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த உள்ளமும் இப்படித்தான் இருக்கும் என உணர முடியாத சுவர்க்கத்தைக் கொடுத்தருள்வாயாக! எனக் கேட்டார். நாயகமவர்கள் அவரின் அந்த துஆவிற்கு அமீன் சொன்னார்கள்.

பின்னர் நாயகமவர்கள் தோழர்களை நோக்கி நிச்சயமாக அல்லாஹ் அவைகளைப் பாத்திமாவுக்கு இவ்வுலகிலேயே கொடுத்துவிட்டான். நான் அவரின் தந்தையாக இருக்கின்றேன். இவ்வுலகில் என்னைப் போன்று யாருமில்லை. ஹழ்ரத் அலி அவர்களின் கணவராக இருக்கின்றார்கள். அலி இல்லையென்றால் பாத்திமாவுக்குப் பொருத்தமான கணவர் ஒரு காலமும் இருக்க முடியாது. மேலும் அவர்களுக்கு ஹஸன், ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹுமாவைக் கொடுத்துள்ளான். இவ்வுலகத்தாரில் அவர்களைப் போன்று யாருமில்லை. அவர்கள் இருவரும் நபிமார்களின் பேரப்பிள்ளைகளான வாலிபர் களுக்கு தலைவர்களாவார்கள். மேலும், சுவர்க்கலோக வாலிபர்களுக்கு தலைவர்களாகவும் இருப்பார்கள் என்றார்கள்.

பின்னர் தனக்குப்பக்கத்தில் அமர்ந்திருந்த மிக்தாத் இப்னு அம்ர் ஸல்மானுல் பாரிஸ், அம்மார் இப்னு யாஸிர் போன்றோரை நோக்கி இன்னும் அதிகமாக் கட்டுமா? எனக் கேட்டார்கள். அவர்களும் ஆம், எனக் கூற, நாயகமவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்: "பாத்திமா நாயகியின் உயிர் கைப்பற்றப்பட்டு கப்றில் அடக்கம் செய்யப்பட்டவுடன் உங்களின் ரப்பு யார்? என்று அவர்களிடம் கேட்கப்படும் எனது ரப்பு அல்லாஹ் என்று அவர்கள் பதிலுரைப்பார்கள். பின் னர் உங்களின் நபி யார்? எனக் கேட்கப்படும், எனது நபி எனது தந்தை எனப் பதில் சொல்வார்கள் என ஜிப்ரியீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறிச் சென்றார்கள் எனக் கூறிவிட்டு இன்னும் அவர்களின் வரிசையைப்பற்றி சொல் லட்டுமா? எனக் கேட்க, தோழர்களும் ஆம், என்றார்கள். அதற்கு நபியவர்கள், நிச்சயமாக அல்லாஹ் எனது மகள் பாத்திமாவை பாதுகாப்பதற்கு அவர்களுக்கு முன்னும், பின்னும், வலப்புறமும், இடப்புறமும் மலக்குகளின் ஒரு கூட்டத்தை ஏற்படுத்தி வைத்திருக்கின்றான். அம்மலக்குகள் எனது மகள் உயிர் வாழும் பொழுதும் அதன் பின் அவர்களின் கப்ரிடத்திலும் இருந்து கொண்டு அவர்களின் மீதும் அவர்களின் தந்தையாகிய என்னின் மீதும், அவர்களின் கணவராகிய அலியின் மீதும், அவர்களின் மக்களின் மீதும் அதிகமாக ஸலவாத்துச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். எனவே, நான் மறைந்த பின்னர் யார் என்னை ஸியாரத்துச் செய்கின்றாரோ, நான் இவ்வுலகில் இருக்கும் போதே என்னை ஸியாரத்து செய்தவனைப் போன்றாவான். யார் பாத்திமாவை ஸியாரத் செய்கின்றார்களோ, அவர் என்னை ஸியாரத் செய்தவரைப் போன்றாவார்" என்பதாக.

அத்துடன் அம்மார் இப்னு யாஸிர் ؓ அவர்கள் தான் வாங்கிய மாலையை எடுத்து அதனை நறுமண வஸ்துக்களில் பிரட்டியெடுத்து யெமன் தேச விரிப்பில் வைத்து சுத்தி ஹுனைன் யுத்தத்தில் கனீமத்துப் பொருட்களோடு தனக்குப் பங்காகக் கிடைத்த அடிமைச் சிறுவனிடத்தில் இதைக் கொண்டு சென்று அருமை நபியிடம் கொடுத்துவிட்டு, நீயும் அவர்களுக்கு இன்றிலிருந்து அடிமை யாயிரு! என்று சொல்ல அச்சிறுவனும் அவ்வாறே, மாலையை எடுத்துச் சென்று அண்ணலாரிடம் கொடுத்து விட்டு ஹழ்ரத் அம்மாரின் வார்த்தையும் கூற, இது கேட்ட நபியவர்கள் இதைக் கொண்டு சென்று பாதிமாவிடம் கொண்டு சென்று கொடுத்த விட்டு நீயும் இன்றிலிருந்து பாத்திமாவுக்கு அடிமையாக இரு! என்று கூற அதனை எடுத்துக் கொண்டு அச்சிறுவன் அன்னை பாத்திமா நாயகியிடம் கொடுத்து அண்ணலார் சொன்னதையும் கூற உடனே, அன்னை பாத்திமா நாயகியார் அவர்கள், அச்சிறுவனை அடிமைத்தனத்திலிருந்து உரிமையிட்டார்கள். உடனே, அச்சிறுவன் சிரித்தான். இதைக் கண்ட பாத்திமா நாயகியவர்கள் ஏன் சிரிக்கிறீர்? எனக் கேட்க, இந்த மாலையின் வலுப்பமான பறக்கத்து என்னை சிரிக்க வைத்தது. பசித்தவனுக்கு வயிறு நிரம்ப உணவு கொடுத்தது, உடையில்லாதவனுக்கு உடை கொடுத்தது, ஏழையை சீமானாக் கியது மட்டுமல்ல, அடிமையை உரிமையிட்டது. இறுதியாக, சொந்தக் காரருக்கே வந்தும் சேர்ந்தும் விட்டது என்றான்.

பார்த்தீர்களா! எங்கள் நபி முஹம்மத் ﷺ அவர்களுக்கு எவ்வளவு சிறப்புக்கள் இருக்கின்றது என்பதனை. கண்மணி ﷺ அவர்களின் சிறப்புக்களின் ஓர் துளியாய் அமையும் இப்புத்தகம் ஒரு சில விடயங்களையே தருகிறது. படித்து முடித்துவிட்டீர்கள். ஆக, சிந்தையை அங்குமிங்கும் சிதறவிடாமல் ﷺ அவர்கள் எம்போன்ற சாதாரண மனிதர் அல்ல என்ற யதார்த்தத்தை, எடுத்தியம்பியுள்ள ஆதாரபூர்வமான வாசகங்களைக் கொண்டு சத்தியத்தை அறிய முயலுங்கள்!. இப்படியான ஒரு நபியின் உம்மத்தாக அல்லாஹ் எம்மை ஆக்கியதையிட்டு அவனுக்கு நன்றி செலுத்துங்கள்!.

அன்பிற்குரிய இஸ்லாமிய நெஞ்சங்களே! இது வரையும் மா நபியின் புக ழுக்குரிய சில ஆதாரங்களையும், அவர்கள் எம்போன்ற சாதாரண மனிதர் அல்ல என்பதற்குரிய சில ஆதாரங்களையும் முன் வைத்துள்ளேன். இதனை நன்குணர்ந்து செயற்படுவீர்களாக!. புனித இஸ்லாத்தை கொச்சைப்படுத்த

வேண்டுமென்ற எண்ணத்தோடு சில சுயநலவாதிகளால் புதிது புதிதாக உருவாக்கப்பட்டு **"த∴வா"** என்ற பெயரால் வட்டமிடப்படும் வளைக்குள் சிக்கித்தவித்து மறுமை வாழ்வை இழந்துவிடாதீர்கள்!. யா அல்லாஹ்! இப்பேர்ப்பட்டவர்களின் மாய வளைகளில் எம்மை சிக்குண்டு தவிக்க விடாமல் எம்மனைவரையும் பாதுகாத்தருள்வாயாக!.

ஸல்லல்லாஹ் அலாமுஹம்மத்

ஸல்லல்லாஹ் அலைஹிவஸல்லம்

ஸல்லல்லாஹ் அலாமுஹம்மத்

ஸல்லல்லாஹ் அலைஹிவஸல்லம்

ஸல்லல்லாஹ் அலாமுஹம்மத்

ஸல்லல்லாஹ் அலைஹிவஸல்லம்.

